[illegible]

V 3. N10 49 11 Dec 1930

3L
[illegible]211, N28K[illegible]
N30.3.49
189133

977

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

19 FEB 1931

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 3] 1930 ௵ டிசம்பர் ௴ 11௳ [No 49

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 961
2. அப்பர் (ஓவியமும் கவித்வமும்)
E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 963
3. ஞானமொழிகள்
நவாலி க. வேலுப்பிள்ளை 965
4. நம்மாழ்வார் வைபவம் (2ம் பத்து 6ம் தசகம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A., B.L. 967
5. குறுந்தொகை (பாட்டு 381—391)
K. இராமரத்நம் ஐயர் B.A. 969
6. வாழ்வின் பயனும் கருமமும் (John Ruskin) 971
7. கம்ப ராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 973
8. தமிழ்ப்பாடம் (இலக்கணம்) 975
9. வர்த்தமானம் 979

அடுத்தவருடத்திய சந்தாவிற்காக ஜனவரி முதல் வி பி அனுப்புவோம். மற்று நண்பர்கள் இம்மாத இறுதிக்குள்ளேயே தங்களது 1931-வது வருடத்திய சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்புவார்களாயின் அவர்களுக்கு வி பி செலவு குறைவதுடன் எமக்கும் சௌகிரிய மாயிருக்கும் :

"மானேஜர்"

## கலாநிலயம்

### பெருமையின் பெருமை.

18933

II

நாலடிச் செய்யுளொன்றால் நயக்கப்படும் 'நெஞ்சத்து நல்லம் யாம்' என்னும் நினைவுமன்னிய வந் நன்னிலை நனிமிகச் சீரிது. இதனை னெய்தியவோர் அசைவிலா வமைதியும் மாறுதவின்பமு முடையாரிற் பெரியா ரில்லையென் றிவ்வுலகின்கண் எண்ணுதலியற்கையே; அது பிழையுமன்று. ஆயினும், இன்னவர்களையும் ஓரளவு விஞ்சுதற் கியலுமென்னத் துணிகின்றோம். விஞ்சுதற்கியலுமோ என்பதொன்றே இங்கு ஆராயப்பெறுகின்ற தாதலான், அவ்வாறு விஞ்சினவர் இவ்வையகத்தில் 'உளர் இலர்' என்னுமொரு உறுதிச்சொல் ஈண்டு இன்றியமையாததன்று. ஆசைபற்றி, விஞ்சஇயலும் என அறையலுற்றேமே யன்றி வேறன்று. தீமையே பூண்டொழுகுவார் மனிதரிற் கடையாய கயவர். தீயனசெய்யத் துணியாரேனும் நல்லறங்கள்சில முனைந்தாற்றாது தம் கடவநாள் நடத்துபவர்,உலகவழக்கில் பழிப்புடையராகாவிடினும், உண்மையை உரைக்குங்கால் மாந்தருள் கோதெனக் கழித்தற்குரியவ ராகின்றனர். புகழ் புண்ணியம் அனைய இம்மைமறுமைப் பயன்கள் இலக்காகச் சில நல்லறச் செயல்கள் நடத்துபவர்களோ கைக்கூலிக்காரரே போல்கின்றனர். இடக்கையு மறியாமல் நல்லன நிகழ்த்தும் வலக்கையினேரும், 'புண்ணியங்கள் புரிவதெல்லாம் வழுவா அறத்தொடு நிகழுமோர் வாழ்க்கையை எய்துதற்கேயாதலின், நல்லன ஆற்றலால் யான் அடைதற்கு வேறொன்று யாதுளாது' என்னுங் கலக்கமில் மனத்தினேரும் பலபடி பாராட்டற்குரியவர்களே. இப்பின்னவரினத்திற் கொரு அரசெனத் தக்கவன் கன்னன். ஈகையறத்தை இணையிலாததோர் வகையில் மேற்கொண் டியற்றினவ னவன். இதனால் புண்ணியம் பெரிதுசென் றவனை யடைந்திருந்தது. எனினும் அப்புண்ணியத்தால் வேறோர்போகம் பயக்க அதனைத்தான் நுகரும்பொருட்டு வள்ளலாய் வாழ்ந்தானல்லன். ஈகையால் ஈட்டிய புண்ணியமெல்லாம் மீட்டுமவ் வீகையை வளர்க்கவேண்டு மென்பதொன்றே கன்னன் தன் வள்ளற்றன்மையால் கண்டதோர் வாம்மையாயிற்று. விசயன்றன் வெங்கணை தைத்துச் சாய்கின்ற கன்னன்முன் மெய்த்தவப் படிவவேதியனாகித் தோன்றிய மாமாயன், "ஒன்றியபடி நின் புண்

ணிய மனைத்தும் உதவுக" என்று இரந்தநாள் யாது அவன் செய்தனன். "மறையோய், வேண்டுவோர் வேண்டின யான் வழங்கியவிரதமனைத்தும் புண்ணியம் ஈட்டுதல் பொருட்டேயன்றே. அதனையே நினக்கீந்துவிட்டேனாயின், மற்று யான் ஈந்திருந்த கொள்கையெல்லாம் எப்பயனு மெய்தாது கொன்னே கழியவோ இது கழறுகின்றனை. வேண்டுவ துனக்கு வேறொன் றுளதேல், கேள்" என மறுத்தறைந்திடாது, "ஒவிலாது யான்செய் புண்ணியமனைத்தும் உதவினேன், கொள்க" என்றவந் தளித்தனன். கொடையிது பெரியதே. ஆயினும் கதிரவன் மதலைதன் கதை இதனொடு முடிந்திருக்குமேல் அவன்பெருமை முற்றிலும் அறியப்பெற்றவ ராகோம். அன்னவாறு கன்னன் அளித்தலும்,

மல்லலந் தொடையல் நிருபனை முனிவன்
மகிழ்ந்துநீ வேண்டிய வரங்கள்
சொல்லுக வுனக்குத் தருதுமென் றுரைப்பச்
சூரன்மா மதலையுஞ் சொல்வான்
அல்லல்வெவ் வினையா லின்னமுற் பவமுண்
டாயினு மேழேழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா
இதயம்நீ யளித்தரு ளென்றான்.

என்பார் வல்லிப்புத்தூராழ்வார். ஈகையாற் கன்னனுக் கெய்தியிருந்தது புண்ணியம். அப்புண்ணியத்தையுமே ஈந்துதவியது மாபெரும் புண்ணிய மாதல் வேண்டும். இத்துணைப் புண்ணியத்திற்கும் தன்பால் வேண்டிய வரங்கள் விழைந்து கொள்ளுமாறவனை அம்மாதவவேதியன் தூண்டினன். வரங்கள்என்னப் பன்மையி லச்சொல் லமைந்திருப்பது உறுபொருளுணர்த்தும் உண்மை பெரிதுடைத்து. வரங்கள்பல வுவந்தருள அவ்வந்தணன் நின்றானேனும் இம்மைக்கும் மறுமைக்கு முறுதியென வுரைக்கப்பெறும் பொருளொன்றுங் கேட்டெய்துங் கருத்தோ கன்னனுக்கெழுந்ததில்லை. அமையநோக்கிய ஆவணத்தில் தம் புண்ணியத்தை விலையாக்கிக்கொள்ளுமொரு வர்த்தகத்தி னவலவெண்ணம் கன்னனனையவித்தகரகத் துதிப்ப தெங்ஙனம்! ஆதலின், ஈதலென்னுந் தலையறத்தினின்று பெற்ற புண்ணியத்திற் கீடாகக் கேட்பதற்கொன் றுளதெனின் அவ்வீகையே யன்றி வேறு யாதுளதுகொல், எனத் துணிந்தனனிப் பரிதியின் புனிதப்புதல்வன். துணிந்து, "இல்லையென்று இரப்போர்க்கு இல்லையென்று உரையா இதயம், ஏழேழு பிறவியிலும் யானெய்தும் வரமொன்று அளித்தருள்" என எம்மனோர் உள்ளம் உருகிக்கரைந்தோட அவன் திப்பியநினைவினி லுறைந்திடுமாறு சீறிய கூரிய தீஞ்சொல்வல்ல வில்லியின் திருவாக்கினாற் கண்ணபிரானை அங்கர்பூபதிஅன்று கேட்டுயர்ந்தனன். கைதவத்தில் வந்து தன் மைத்துனனை வஞ்சித்த படுபழிதீருமாறு எம்பெருமான் அக்கன்னன்றன் பெருமையைக் காட்டித்தந்தார். வாமனனாய் மாவலிபால் மூன்றடிமண் வேண்டிச்சென்ற வந்நாள் நீண்டும், பாலனாய் ஆலிலை துயின்றகாலை முகந்தும், ஏனமாய் அகழ்ந்தவேலை எடுத்தும், புவனங்களை அளந்துகாட்டிய பரமன் இன்றோர் அந்தணனாய் முன்வந்து உத்தமப் பெருந்தகை ஒருவனது இதயத்தின் தூய்மையிது அளக்குநர் அளவிதென்று ஆராயலாயினரோ. அதன்மேல், கண்ணபிரான் அருளியவரங்களை எடுத்தியம்பல் இக்கட்டுரையகவயி னிடைப்பிறவா லாகுமெனினும், வரமொன்றே வேண்டிய அத்தூய்மையோற்கு, ஈயும் இதயமும், கைப்பொருளில்லா வள்ளற்கருத்துச் சாலக் கொடிதாதலின் செல்வமும், முடிவில் முத்தியும் அடையும்படி அருளியதிறத்தினை இங்குக்குறித்துப் போகலாம். உத்தமர்களைத்தேடித்தேடி முத்திதந் தருளும் செவ்வியோ னெம் செங்கண்மாலே.

இன்னபடி நிகழ்கின்ற கன்னனனையார் இப்புவியின்கண் இன்றுமுளரேல் அவர் இணையிலா உத்தமர்களே என்னல் வேண்டுமாயினும் இப்பெருமையினும் மிகுதியாய பெருமைக்குரியராவார் இவரிற் சிறிதளவு வேறாயவோர் இயல்பினர். பயன்தூக்கா தீயும் பக்குவமடைந்த மாண்பினனே ஆனாலும் கன்னன் ஈகையைப் புரிபவன் தான் என்னும் அறிவு அவனுக்கிருந்தது. அதுவே அறமென் றட்கொண் டாற்றினனவன். இவ்வுணர்வு அவன்சிறப்பைச் சிறிதளவு சிதைக்கின்றதோவென எண்ணல்வேண்டும். தானென்னு மகங்காரத்தால் தாழ்ந்தானென்பது எம் கருத்தன்று. ஒருதொழிலின் அல்லது ஒரு நிலையின் பெருமை எத்துணை யுயர்ந்ததேனும், தன்னையே அறியாமல் அத்தொழிலைப் புரிபவரும் அந்நிலையில் நிற்பவரும் எய்திய பெருமையின் உயர்வினை, தம் தொழிலையும் நிலையையும் தெரிந்து விவகரிப்பவர் எட்டமாட்டார். கற்பென்னுங் குணமுடையாள் தான் என்று தெரிந்துகொண்டொழுகுமொரு பெண்ணினும் அன்னதன்மையை அறியாமலே அந்நிலைநிற்பாள் வேறொருத்தி உயர்ந்தவளல்லளோ! நிலைமைக்குரிய விது புரியுந் தொழிலிற்கும் பொருந்தும். கடவுள்பால் பக்தியாலும் மனிதர்பால் அன்பினாலும் வியக்கத்தகும் தொழில்புரிவார் பெருமக்கள் உளர். கடவுளிடத்தில் பக்தி தமக்குளதென்னும் உணர்வினோடு ஆராதனைகள் புரிவாரும், மாந்தர்பால் தமக்கு அன்பும் அருளும் உளதென்னு முணர்வினோடு நல்லறங்கள் ஆற்றுவாரும், இது இது வென்னும் ஆராய்ச்சியும் அறிவும் இன்றியே ஆவினைக்கண்ட கன்றுபோல் கடவுளிடத்தும், கன்றினைக்கண்ட ஆவைப்போல் மாந்தரிடத்தும் பக்தியுமன்பும் வாய்ந்த இயற்கைச் செவ்வியோர்க்கிணையாக மாட்டார். தூய்மையும் தெய்வபக்தியும் எய்திச்சிறந்த பட்டினத்தடிகள்,

வாளான் மகவரிந் தூட்டவல் லேனல்லேன்
மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லேன்
தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்லேன்
நானினிச்சென்
றாளாவ தெப்படி யோதிருக் காளத்தி
யப்பனுக்கே

என நினைந்நினைந்திரங்கி யேங்கிய சிந்தையில் யாம் இங்கு விளக்கமுயல்கின்ற கருத்தினை நன்கு விளக்கிக் காட்டுகின்றார். காளத்தியப்பன்பால் தான்செலுத்தும் பக்தி கருத்துடன் தொடர்ந்து செய்யப்படுகின்றதாதலின் அது செயற்கைநிலையே என்றும், விளையாட்டுச் சிறுவனை யரிந்து விருந்திட்ட சிறுத்தொண்டனும், 'திருநீலகண்டம் என்னைத் தீண்டேல்' என்னுந் தன் ஊடியமனையாள் உரைத்த சூள் கடவாது தன் இளமையைக் கடந்த திருநீலகண்ட நாயனாரும், புண்ணுற்ற கண்ணிழந்து சிவபிரான் உழலாவண்ணம் தன்னிரு கண்ணையுங் விரைந்துதவத் தலைப்பட்ட திண்ணனாரும் இயற்கைநிலைநின்ற மேன்மையோ ரென்றும் பிரித்துக்காட்டும் இவ்வாய்மை மறக்கற்பாலதன்று. செயற்கைச்செய்தியினும் இயற்கைச் செவ்வி எக்காலும் சிறந்தது. இதனான் பட்டினத்தடிகள்போல்வார் சிறியவரென்பது எம் சிந்தையன்று. அப்பெருமை எய்துதற்கோ பாக்கியம் பெரிது வேண்டும். அவர் பெரியவராதலாற்றான் பெருமையின் பொருமையைத் தெரிந்தவராயினார். பிறருடைய பெருமையை அறிந்தவர் மிகப்பெரியர்; அதனினும் பெரியார் தங்கள்பெருமையைத் தாமே அறியாதார்.



# அப்பர்

## அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

### 16. ஓவியமும் கவித்துவமும்.

[949-வது பக்கத்தொடர்ச்சி]

(7) கடலின் வனப்பும் வங்கங்கள் தோற்றமும்:—

இவை பெரும்பாலும் கடற்கரையோரமான தலங்களில் நமது சமயாசுரவர்கள் பாடிய பதிகங்களிற் காணலாகும்.

கரையுலாங் கடலிற் பொலிசங்கம் வெள்ளிப்பிவன்
திரையுலாங்கழி மீனுக ளுந்திரு வான்மியூர்
உரையுலாம் பொருளாயுல காளுடையீர் சொலீர்
வரையுலாமட மாதுட னாகிய மாண்பதே.

சம்பந்தர்.

ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தருவேல் வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
யார்தரு சோலைக் கபாலீச்சர மமர்ந்தான்
ஆதிரை நாள்காணாது போதியோ பூம்பாவாய்.

ஷை.

பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டும் கலமுந் திமிலுங் கரைக்கே
ஓட்டுந் திரைவா யொற்றி யூரே.

சம்பந்தர்.

கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே!
கட்டி யேபலர்க் குங்களை கண்ணே!
அங்கை நெல்லியின் பழத்திடை யமுதே!
யத்தாவென்னிட ரார்க்கெடுத்துரைப்பேன்
சங்கு மிப்பியுஞ் சலஞ்சல முரல
வயிர முத்தோடு பொன்மணி வரன்றி
ஒங்கு மாகட லோதம்வந் துலவு
மொற்றி யூரெனு மூருறை வானே.

சுந்தரர்.

வல்லராய் வானவர்க ளெல்லாங் கூடி
வணங்குவார் வாழ்த்துவார் வந்து நிற்பார்
எல்லேயெம் பெருமானைக் காணோ மென்ன
வெவ்வாற்றா லெவ்வகையாற் காண மாட்டார்
நல்லார்க ளான்மறையோர் கூடி நேடி
நாமிருக்கு மூர்பணியீ ரடிகே ளென்ன
ஒல்லைத்தான் றிரையேறி யோத மீளு
மொளிதிகழு மொற்றியூ ரென்கின் றாரே.

திருவொற்றியூர்-திருத்தாண்டகம் 7.

நரை யார்ந்த விடையேறி நீறு பூசி
நாகங்கச் சரைக்கார்த்தோர் தலைகை யேந்தி
உரையாவந் தில்புகுந்து பலிதான் வேண்ட
வெம்மடிகளும் மூர்தா னேதோ வென்ன
விரையாதே கேட்டியேல் வேற்க ணல்லாய்
விடுங்கலங் ணெடுங்கடலு ணின்று தோன்றும்
திரை மோதக் கரையேறிச் சங்க மூருந்
திருவொற்றி யூரென்றார் தீய வாறே.

ஷை 4.

இரவத் திடுகாட் டெரியாடிற் றென்னே
யிறந்தார் தலையிற் பலிகொண்ட தென்னே
பரவித் தொழுவார் பெறுபண்ட மென்னே
பரமா பரமேட்டி பணித் தருளாய்
உரவத் தொடுசங்க மொடிப்பி முத்தங்
கொணர்ந்தெற்றி முழங்கி வலம்புரிகொண்
டரவக் கடலங் கரைமேன் மகோதை
யணியார் பொழிலஞ்சை களத்தப்பனே.

சுந்தரர்.

பிடிக்குக் களிறே யொத்திபா லெம்பிரான்
பிரமற் கும்பிரான் மற்றைமாற் கும்பிரான்
நொடிக்கு மளவிற் புரமூன் றெரியச்
சிலைதொட் டவனை யுனைநான் மறவேன்
வடிக்கின் றனபோற் சிலவன் றிரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்
டடிக்குங் கடலங் கரைமேன் மகோதை
யணியார் பொழிலஞ் சைகளத் தப்பனே.

சுந்தரர்.

கடிதென வந்த கரிதனை யுரித்து
வவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந் தாரே.

சம்பந்தர்.

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் றேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச்சேர்க்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

ஷை.

நலம்பெரியன சுரும்பார்ந்தன நங்கோனிட மறிந்தோம்
கலம்பெரியன சாருங்கடற் கரைபொருதிழி கங்கைச்
சலம்புரிசடை முடியுடையவர்க் கிடமாவது பரவை
வலம்புரியொடுசலஞ்சலங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே

சுந்தரர்.

அங்கங்களு மறைநான்குடன்
விரித்தானிட மறிந்தோம்
தெங்கங்களு நெடும்பெண்ணையும்
பழம்வீழ்மணற் படப்பைச்
சங்கங்களு மிலங்கிப்பியும்
வலம்புரிகளு மிடறி
வங்கங்களு முயர்கூம்பொடு
வணங்கும்மறைக் காடே.

சுந்தரர்.

சங்கு வந்தலைக் குந்தடங் கானல்வாய்
வங்க மார்வலங் கொண்மறைக் காடரோ
கங்கை செஞ்சடை வைப்பது மன்றியே
அங்கை யில்லன லேந்த லழகிதே.

திருமறைக்காடு - திருக்குறுந்தொகை 9.

வாசமலர் மேவியுறை வானுநெடு
மாலுமறி யாதநெறியைக்
கூசுதல்செ யாதவம ரைதரொடு
தேரர்குறு காதவர னூர்
காசுமணி வார்கனக நீடுகட
லோடுதிரை வார்துவலைமேல்
வீசுவலை வாணரவை வாரிவலை
பேசுமெழில் வேதவனமே

சம்பந்தர்.

கலங்கோள் கடலோத முலாவுங் கரைமேல்
வலங்கொள் பவர்வாழ்த் திசைக்கும் மறைக்காடர்
இலங்கை யுடையா னடர்ப்பட் டிடரெய்த
அலங்கல் விரலூன்றி யருள்செய்த வாறே

சம்பந்தர்.

சங்கந் தரளம் மவைதான் கரைக் கேற்றும்
வங்கக் கடல்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
மங்கை யுமைபாகமு மாகவி தென்சொல்
கங்கை சடைமே லடைவித்த கருத்தே.

சம்பந்தர்.

புலங்கள்பூந் தேறல்வாய்ப் புகலிக் கோனைப்
பூம்புகார்க் கற்பகத்தைப் புன்கூர் மேய
அலங்கலங் கழனிரு முணிநீர்க் கங்கை
யவிர்சடைமே லாதரித்த வம்மான் றன்னை
இலங்கு தலைமாலை பாம்பு கொண்டு
ஏகாச மிட்டயங்கு மீசன் றன்னைக்
கலங்கற் கடல்புடை சூழ்ந்த ணைகைக்
காரோணத் தெஞ்ஞான் றுங் காண லாமே.

திருநாகைக்காரோணம்-திருத்தாண்டகம் 6.

பருமா மணியும் பவளமு முத்தும்
பரந்துந்திவரை
பொருமால் கரைமேற் றிரைகொணர்ந்
தெற்றப் பொலிந்திலங்கும்
கருமா மிடறுடைக் கண்டனெம்
மான்கழிப் பாலையெந்தை
பெருமா னவனென்னை யாளுடை
யானிப் பெருநிலத்தே.

திருக்கழிப்பாலை-திருவிருத்தம் 2.

(8) ஊர்களில் வீதிகள் கோலம், அரங்கு முதலியன.

மங்குன்மதி தவழு மாட வீதி
மயிலாப்பி லுள்ளார் மருக லுள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்று லத்தார்
குடமூக்கி லுள்ளார்போய்க் கொள்ளம் பூதூர்த்
தங்குமிட மறியார் சால நாளார்
தரும புரத்துள்ளார் தக்க ளூரார்
பொங்குவெண் ணீறணிந்து பூதஞ்சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே.

புக்க திருத்தாண்டகம் 1.

சோண்டல்சேர் கோபுரங் கோலமார் மாளிகை
கண்டலுங் கைதையுங் கமலமார் வாவியும்
வண்டுலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியிற்
செண்டுசேர் விடையினன் றிருந்தடி பணிமினே.

சம்பந்தர்.

கொம்பன்ன மின்னி னிடையாளொர் கூறன்
விடைநாளு மேறு குழகன்
நம்பன்னெ மன்பன் மறைநாவன் வானின்
மதியேறு சென்னி யரனூர்
அம்பன்ன வொண்க ணவரா டரங்கி
னணிகோ புரங்க ளழகார்
செம்பொன்ன செவ்வி தருமாட நீடு
திருமுல்லை வாயி லிதுவே

சம்பந்தர்.

மங்குரேய் மணிமாட
மதிதவழு நெடுவீதிச்
சங்கெலாம் கரைபொருது
திரைபுலம்பும் சாய்க்காட்டான்
கொங்குலா வரிவண்டின்
னிசைபாடு மலர்க்கொன்றைத்
தொங்கலா னடியார்க்குச்
சுவர்க்கங்கள் பொருளலவே.

சம்பந்தர்.

மையாரோண் கண்ணார் மாடநெடு வீதி
கையாற் பந்தோச்சுங் * கழிசூழ்தில் லையுட்
பொய்யா மறைபாடல் புரிந்தானுல கேத்தச்
செய்யா னுறைகோயில் சிற்றம்பலம் தானே.

சம்பந்தர்.

வாராரு முலைமங்கை பங்கத் தான்காண்
மாமறைக ளாயவன்காண் மண்ணும் விண்ணும்
கூரார்வெந் தழலவனுங் காற்று நீருங்
குலவரையு மாயவன்காண் கெடுநஞ் சுண்ட
காராருங் கண்டன்கா ணெண்டோ ளன்காண்
கயிலைமலைப் பொருப்பன்காண்விருப்போடென்றும்
தேராரு † நெடுவீதித் திருப்புத் தூரிற்
றிருத்தளியான் காணவனென் சிந்தை யானே.

திருப்புத்தூர் - திருத்தாண்டகம் 2.

காண்டகு மலைமகள் கதிர்நிலா
முறுவல் செய்தருள் வேயும்
பூண்டநாகம் புறங்கா டரங்காக
நடமாடல் பேணி
ஈண்டு மாமடங்கண் மாளிகை
மீதெழு கோடி மதியம்
தீண்டிவந் துலவிய திருநெல்
வேலியுறை செல்வர் தாமே.

சம்பந்தர்.

மாசின்மதி சூடுசடை மாமுடியர்
வல்லசுரர் தொன்னகரமுன்
நாசமது செய்துநல வானவர்க
ளுக்கருள்செய் நம்ப னிடமாம்
வாசமலி மென்குழல் மடந்தையர்கண்
மாளிகையின் மன்னி யழகார்
ஊசன்மிசை யேறியினி தாகவிசை
பாடுதவி மாணி குழியே.

ஷை.

---

* இந்தணை யுஞ்சடை யார்விடையா ரிப்பிறப்
பென்னை யறுக்க வல்லார்
வந்தணைந் தின்னிசை பாடுவார்பான் மன்னினர்
மன்னி யிருந்த வூராம்
கொந்தணை யுங்குழலார் விழவிற் கூட்ட
மிடையிடை சேரும் வீதிப்
பந்தணை யும்விர லார்த மாரூரம்
பசுபதி யீச்சரம் பாடுநாவே.

சம்பந்தர்.

† பாரும் விண்ணும் பரவித்தொழ தேத்தும்
தேர்கோள் வீதி விழவார் திருப்புன்கூர்
ஆர நின்ற வடிக ளவர்போலும்
கூர நின்ற வெயின்மூன் றெரித்தாரே.

திருப்புன்கூர் - திருக்குறுந்தொகை 7.



குன்றவார்சிலை நாணராவரி வாளிகூரெரி
காற்றின் மும்மதில்
வென்றவா றெங்ஙனே
விடையேறும் வேதியனே!
தென்றலார்மணி மாட மாளிகை சூளிகைக்கெதிர்
நீண்ட டெண்ணைமேல்
அன்றில் வந்தணையு
மாமாத்தூ ரம்மானே !

ஷை.

ஆட்டான் பட்டமையா லடியார்க்குத்
தொண்டு பட்டுக்
கேட்டேன் கேட்பதெல்லாம் பிற
வாவகை கேட்டொழிந்தேன்
சேட்டார் மாளிகைசூழ் திருமேற்
றளியுறையும்
மாட்டே யுன்னை யல்லான்
மகிழ்ந்தேத்த மாட்டேனே.

சுந்தரர்.

நிலைவாய் நின்னடியே நினைந் தேனினைதலுமே
தலைவா! நின்னினையப் பணித் தாய் சலமொழிந்தேன்
நிலையார் மாமதில்சூழ் திரு மேற்றளியுறையும்
மலையே! யுன்னையல்லான் மகிழ்ந் தேத்த மாட்டேனே.

ஷை.

# ஞான மொழிகள்.

[956-வது பக்கத் தொடர்ச்சி]

உலகமுய்ய எழுந்தருளிய பெரியோனே! ஒளி பொருந்திய ஆறு திருமுகங்களை யுடையாய்! பன்னிரு கண்ணு! என்னிரு கண்ணு! தண்டமிழ் மாலை தாரொடு பொலியுந் திண்டோள் வெற்பா! அழகொழுக அமுதொழுகுங் கனிவாயாய்! நிலவொழுக நறையொழுகும் மூரலாய்! எங்கணுங் கேள்வியை யுடையாய், எங்கணும் விழிகளையுடையாய்; தண்டை கிண்கிணி தழைத்த தாமரைத்தாளா! கிஞ்சுகவா யஞ்சொற் குஞ்சரிமணாளா! செவ்வேளே! குறமங்கை பாகா! முருகா! அருட்கடலே! உயிர்க்குயிரே!

* * *

அடியேன் சிற்றறிவுடையேன். ஆதலின் வேண்டத்தக்கது இது வேண்டத்தகாதது இது என்று அறியேன். தேவரீர் பேரறிவுடையீர், இன்னகாலத்தில் இன்னது இவனுக்கு வேண்டும் என்று அறிவீர். ஆதலின் வேண்டுங்காலத்து வேண்டியதை யருளி ஆட்கொள்வது முழுமுதல்வா, உன் கடன்—பணி செய்வது என் கடன்.

* * * *

முருகா! இருவகை ஞானங்களின் அடையாளங்களாகிய உனது இரண்டு சேவடிகளையும் கும்பிடுகின்றேன். என் கும்பிடுகின்றேன் என்பதை நீ யறிவாய்.

* * * *

முருகனிடத் தன்புள்ளவனே! சாவாதவில்லை பிறந்த உயிரெல்லாம்; எப்போதாயினுங் கூற்றுவன் வருவான். கருவினுள் அழியும், கழிந்தபின் அழியும், உருவினுள் அழியும், நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை. வினைப்போகமே இந்தக தேகம். வினைதானகன்றால் தினைப்போதளவும் நில்லாது. ஆதலால் மன்னுயிர்கட்கு அருள்புரியும் விருப்பமும், அவ்விருப்பத்தை முற்றுவிக்கும் தொழிலும் அத்தொழில் நிகழுங்கால் அவ்வுயிர்களை இருவினை இன்ப துன்பப் புசிப்புக்களில் அழுந்துவிக்கும் மறைப்பும் ஆகிய மூன்றும் முறையே வள்ளிநாயகியாரும், தெய்வநாயகியாரும், மயில்வாகனமும் ஆகவும், இருவினை இன்பதுன்பம் புசித்துத் தொலைந்தவழி மலபரிபாகமும் சத்தினிபாதமும் உண்டாக அப்பொழுது ஏற்றதொரு நெறியால் ஆணவவழுக்கை யகற்றி வாலறிவை நிறைவிக்கும் வல்லமை வேற்படையாகவும், கடம்பு முதலாகிய அடையாள மாலைகள் திருவருட் குறிகளாகவும், ஆறு திருமுகங்கள் ஆறு குணங்களாகவும் உடைய செந்தமிழ்த் தெய்வமாகிய முருகக் கடவுளை மெய்யன்புடன் வணங்கு. அதுவும் இன்றே செய். நலனடைவாய்.

* * *

முருகா! உடம்பு உன்னுடையது. உயிர் உன்னையின்றியமையாதது. உடம்பைத் தாங்கும் உலகம் நீ படைத்தது. உடம்பை வளர்க்கும் உணவுப் பொருள்களும் நீ தந்தனவே. நன்மை எல்லாம் உன் செயல். தீமை புரிவது மலத்தின் செயல். என் செயல் பின் யாது. ஒன்று மில்லை.

* * *

அங்கலுழ் மேனிச் செங்கேழ் முருக! அருவும்நீ உருவும்நீ போகிநீ யோகிநீ வித்தும்நீ விளைவும்நீ. ஆயினும் ஒன்றும் நீயல்லை. உன் அருளே விழியாக உன்னை அறிவதன்றி உயிர்கள் தனித்து உன்னை அறியமாட்டா. உன்னருளாலே உன்னை வணங்குகின்றேன். எதற்காக வணங்குவிக்கின்றாயோ அதனை அருள்.

* * *

எம்பெருமானே உனக்கு எங்கணும் வதனம், எங்கணும் விழிகள், எங்கணும் கேள்விகள், எங்கணும் தோள்கள், எங்கணுங் கழலடி, எங்கணும் உன் அருள். உன் அருட்பெருங் கடலிலே உயிர்கள் அனைத்தும் வாழ்கின்றன. ஆயினும் அவைகள் உன்னை அறியவில்லை. உன்னை நுகரவில்லை. என்னே பெரிய மாயம்—ஆம், மலமாயம்!

* * *

உலகமுய்யும்படி ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் கொண்டு எழுந்தருளிய முருகப் பெருமானை, அன்பனே நீ என்றும் வணங்கு.

ஆறு திருமுகங்களுங் கருணைவடிவே; கூறுவன் கேட்டி—

"வானசோதிகளுக் கொளியைக்கொடுத்து அவை மூலமாகப் புறவிருளை நீக்கியும், அறிவுக்கு அருள் ஒளியை யுதவி அதன்மூலமாக அகவிருளை நீக்கியும் காக்கின்ற பெருங்கருணை ஒரு திருமுகமா யமைந்தது."

"விதிவிலக்கறியாது அன்பொன்றையே துணையாகக்கொண்டு வழிபடுகின்ற ஆர்வலர்க்கு அமர்ந்து

இனிதொழுகி வரங்கொடுக்கின்ற கருணை ஒரு திருமுகமாக வமைந்தது".

"விதிவிலக்குக்களை அறிந்து விதிப்படி பூசையைச் செய்கின்ற அறிஞர்களின் பூசையை ஏற்று அவர்களைக் காக்கின்ற பெருங்கருணை ஒரு திருமுகமாக அமைந்தது."

"பக்குவமுடையபெரியோருக்குக் கலைஞானங்களாலுணர்த்தப்படாத அநுபவஞானத்தை உபதேசித்து அவர்களை ஆள்கின்ற பெருங்கருணை ஒரு திருமுகமாக அமைந்தது."

"விலக்குக்களைச் செய்யும் அறிவிலிகளுக்கு அவற்றின் பயனை ஊட்டித் தண்டித்துத் திருத்தும் பெருங்கருணை ஒரு திருமுகமாக அமைந்தது".

"ஆணும் பெண்ணுமாகிய தோற்றங்களை உடைய உயிர்களுக்கு இன்பத்தை ஊட்டுவித்துக் காக்கும் பெருங்கருணை ஒரு திருமுகமாக அமைந்தது"

* * * *

மாணு கேள்! பன்னிரு திருத்தோள்களும் அவ்வருட்குணங்களைத் தொழிற்படுத்தும் கிரியாசத்தியாக அமைந்தன. வீடுபேற்றை யுதவிப் பேரின்பநிலையில் கலக்கச்செய்து பிரியாதுநாக்கும் பெருங்கருணை இரண்டு சேவடிகளாயமைந்தன. ஆகவே முருகன் வடிவம்முற்றும் கருணைவடிவமே. அவன் கருணையேயன்றி வேறொன்றும் புரியான். அருட்கடலாயுள்ளவன். அவன் திருவடிகளை வணங்கு. அவன்பால் வேண்டுவது பொன்னும் மணியும் போகமுமன்று. அவன் திருவடிக்கண் மிக்கவன்பையே வேண்டு. தந்தருள்வான், தந்தருள்வான்.

* * * *

தென்கதிரை வடிவேலனே, நீ ஆண்டான், நானடிமை. நீ அரசன், நான் குற்றவாளி. நோயாகிய தண்டற்காரன் கையிலே என்னைக் கொடுத்துத் தண்டிப்பிக்கின்றாய்; தண்டிப்பது உன் கருணை, படுவது என் கடன். கருணைக் கடலே! நீ நன்றாகத் தண்டனை செய்வி.யான் அஞ்சி அழுவனோ அல்லேன்,வேண்டாம் என்று வெறுப்பனோ அல்லேன். தண்டனை முழுவதையும் ஓரேமுறையில் தந்தால் தாங்கமாட்டேன் என்று திருவுளங்கொண்டு பிரித்துப்பிரித்துத் தருகின்ற நின் பெருங்கருணை வாழி! எம்பெருமானே! இன்னு மொன்றிரப்பன்; தேவரீருடைய தண்டனையைத் தாங்கும் ஆற்றலை எனக்குப் பாலித்தருள்க.

* * *

நாமிசைப்பாவாய்! முருகன் தண்டனையைச் செய்விப்பானாக! நோய் தண்டிப்பதாக. யான் படுவேனாக. நீமாத்திரம் என் நாவை விட்டகலாதே. இவ்வொரு வரத்தையும் எனக்குத் தந்தருள்.

* * *

சிவ சிவ முருகா, நீ பெரியன். யான் சிறியன். நீ அருளன் யான் மருளன். நீ ஒளியன் யா னிருளன். நீ அமலன் யான் சமலன். நீ ஆண்டான் யான் அடிமை. உயர்வுதாழ்வுக் கிருவருக்கும் ஒப்பில்லை. குற்றம் செய்வது என்னியல்பானால் பொறுப்பது உன் கடனாயிற்று. குற்றம்பொறுத்து என்னை இனி ஒரு தாய் வயிற்றிற் போய்ப் புகுத்தாது ஆண்டருள்க.

* * *

அன்பனே! பிறப்பு வினையினால் வருவது. வினை மயக்கத்தினால் வருவது.மயக்கம் அறியாமையால் வருவது. அறியாமை ஆணவமலத்தினால் வருவது. மலம் அநாதி நித்தியப்பொருளாய் அநாதியே உயிர் அறிவை மறைத்தது. ஆகவே மலமறைப்பு நீங்கும் வரைக்கும் அறியாமையும் அது நீங்கும்வரைக்கும் பிறவியும் உண்டு.

* * *

வினை இரண்டு வகைப்படும். நல்வினை, தீவினை. நல்வினை அறமெனப்படும். அறமாவது உயிர்க்குற்றத்தை அறுப்பதற்குக் கருவியாயுள்ளது. அறம் குற்றத்தை நீக்கநீக்க அறிவு விளக்கமுண்டாகும். அறிவு விளக்கம் மேலேமேலே உய்க்கும். அது மேற் பிறவிகளைக் கொடுக்கும். தீவினை மறமெனப்படும். மறமாவது உயிரினறிவை மறைப்பதற்கு கருவியா யுள்ளது. அறிவு மறைய மறைய இருள் உண்டாக மயக்கம் அதிகரிக்கும்; மயக்கம் கீழே கீழே நாக்குவிக்கும். அது கீழ்ப்பிறவிகளைக் கொடுக்கும். பிறவி ஏழு வகைப்படும். பிறவிதோறும் அறிவும் வேறுபடும்.

* * *

அன்பனே கேள்! உலகமுய்ய எழுந்த அலகில் சோதி ஆறுமாமுகத்து அருட்பெருங்கடல் போன்ற முருகனே பெரியவன். எல்லா மறிந்தவன், எல்லாம் செய்ய வல்லவன். குற்றங்களைப் பொறுப்பவன். இரக்கமுடையவன்—நீ இவற்றின் மறுதலையன். நீ இருண்மலத்துடன் கூடிப் பெருமானை மறந்து தலையினால் நடந்தாய், மதங்கொண்டாய். முருகனை அறிந்து முருகனிடத்துன்னை ஒப்புக்கொடு. பின் எல்லாம் அவன் செயல். நீ அவன் உடைமை. நீ யவனடிமை. உன்னை இருள்வழியில் நடத்தாது அருள் வழியில் நடத்துவான்.

மாணு கேள்! பற்றின் வருவது பிறவி. பற்றும் சொற்றிடு மலத்தில் தோன்றுமென்ப. எடுத்த பிறவிக்கெண்ணில்லை. அவைதாம் கெடுத்துங் கெடுத்துங் நீழ் நிலைவிழைந்தாய். பற்றறப் பற்றறப் பிறவியாறும் துன்; பம் பெருகப் பற்று நெகிழும். அடிக்கடி துன்பம் வருவது எற்றுக்கோவெனின்—தன்னினமல்லாதபுழுவைத் தன்போலச் செய்தற்குளண்ணிய வேட்டுவன் என்னுங் குளவி, அப்புழுவைத் தூக்கித் தன் கூட்டிலிட்டு அதனை அடிக்கடி வாலினாற் கொட்டிக் கொண்டேயிருக்கும். ஏன்! அப்புழு தன்னை மறவாது எண்ணிக்கொண்டிருக்கும்படி யன்றோ! அங்ஙனம் குத்தகுத்த வருந்தும் புழு அவ்வேட்டுவனையே நினைத்து நிற்கும்;காலகதியில் அப்புழு வேட்டுவனாய் மாறிவிடுகின்றது. அதுபோல் உயிரைத் தன்னினமாக்க இறைவன் நோய்மிகு துன்பங்களை யூட்டிக் குத்துகின்றான். அவனை என்றும் மறவாது நினைத்திரு. அவனாவாய்.



# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய்மொழி.

[950-வது பக்கத் தொடர்ச்சி]

இரண்டாம் பத்து—6-ம் தசகம்.

1-ம் பாசுரம்

வைகுந்தா மணிவண்ணனே என்பொல்லாத்
    திருக்குறளா வென்னுள் மன்னி
வைகும் வைகல் தோறும்
    அமுதாய வானேறே
செய்குந்தா வருந்தீமை யுன்னடியார்க்குத்
    தீர்த்த சுரர்க்குத் தீமைகள்
செய்குந்தா உன்னைநான்
    பிடித்தேன்கொள் சிக்கெனவே.

பதவுரை:—வைகுந்தா - வைகுண்ட வாஸியே! மணிவண்ணனே - மணியைப்போல் சுபாவ முள்ளவனே (ஆதாதவது ஆச்ரிதர்கள் கைக்கடங்கக்கூடிய உயர்ந்த ரத்னம் போன்றவனே—ஆதாவது ஆச்ரிதருக்குச் சுலபமானவனே) என் - என்னுடைய, பொல்லா - அழகாலே வஞ்சித்துத் தன்வசமாக்கிய, திருக்குறளா-வாமனுவதார மெடுத்தவனே, என்னுள் எனக்குள்ளே, மன்னி - நிலைபெற்று, வைகும் வைகல் தோறும் -தங்குகின்ற தினந்தோறும், அமுதாய-பரிச்சயத்தால் அலட்சியபாவமுண்டாகாமல் நாள்தோறும் அமிர்தமாய, வான்ஏறே-நித்தியஸூரிகளுக்கு நிர்வாஹகனே, உன் அடியார்க்கு- உன் அடியவர்களுக்கு, செய்கும்- ஜந்ம ஜந்மங்களாய்ச் செய்த, தாவரும் -(தா அரும், தா - தாண்டுவதற்கு, அரும் - அருமையான, அதாவது உன் அருள்இன்றி) போக்குதற்கு முடியாத தீமை - பாபங்களை, தீர்த்து - முடியச்செய்து, அசுரர்க்குத் தீமைகள் செய் - பிரதிகூலரான அசுரர்களுக்குத் தீமைகளை விளைக்கும், குந்தா - குந்த புஷ்பம் போன்றவனே, (அதாவது நிர்மலமான தேஜஸை உடையவனே), சிக்கெனவே - விடவொண்ணுதபடி கெட்டியாக, பிடித்தேன்-நீ வந்து தோன்றியதால் அடையப் பெற்றேன். கொள் - உன் திருவுள்ளத்தில் யாதொரு கலக்கத்திற்கும் காரணமின்றி நிச்சயித்துக்கொள். உன் திருவுள்ளம் கலங்கக்காரணமுண்டாயிருந்தது. ஏனென்றால் அடியேன் சென்ற தசகத்தில் 5-ம் பாசுரத்தில் யான் நற்குண மில்லாதவனென்றும் ஒரு வஸ்துவாக நிரூபிக்கக்கூடாதவனென்றும் உன்னோடுகலக்க யோக்கியதை இல்லாதவனென்றும்கருதி "அல்லாவியுள் கலந்தாய்" என்றேன். மேலும் 8-ம்பாசுரத்தில் யான் தாஸனுடையதாழ்மையைக் கருதி "என்முடிவு காணுதே கலந்தாய்" என்று சொன்னேன். ஆகையால் அடியேன் கூச்சத்தால் உன் ஸந்நிதானத்தை விட்டு அகலுவேனென்று மனக்கிலேசம் நேரிடக் காரணங்கள் அங்குக் கிடந்தன. அக்கூச்சம் இப்போது எனக்குப் போயிற்று. இனி உன் தாஸனாக நிச்சயமாய்க் கிருபைகூர்ந்து என்னைக் குறிக்கொள்.

குறிப்புக்கள் I:—ஆழ்வார் முன்னமே 1-ம் பத்து 5-ம் தசகத்தில் பகவானுடைய ஸந்நிதானத்தினின்று அநர்ஹதாபுத்தியாலும் அச்சத்தாலும் நாணத்தாலும் அகன்றார். அதுபோல் இப்பொழுதும் இவர்இயம்பும் தாழ்மையும் நைச்சியமும் இவர் நம்மைவிட்டுப் போய் விடுவதற்குப் பூர்வாங்கமாய் அமைந்ததோ என்ற சங்கைபகவானுக்கு உண்டாகக்காரணங்களிருப்பதால் பகவானைத் தேற்றுவிக்கும் நிமித்தமாய், தாம் முன்போல் அகல எத்தனிக்கமாட்டாரென்று பகவான் நிச்சயித்துக் கொள்ளவேண்டுமென்பது கருத்து.

II தர்ம சாஸ்திரங்களில் ஒருவரையும் பழித்தல் ஆகாது என்று கட்டளையிட்டிருக்கிறது. ஏனெனில் அவைகள் பழிக்கப்படுகிறவன் பாபங்கள் பழிப்பவனைச் சேருமென்று கூறி முறையிடுகின்றன. பக்தர்களின் பாபங்கள் அவர்களுக்குத் தீமை இழைக்கின்ற அசுரர்களிடத்தில் பாய்ந்து போய்விடு மென்ற திருவுள்ளத்தால் "அசுரர்களுக்குத் தீமை செய்யும்" என்றார்.

III முன்பேயே நடந்துவருகிற பகவானின் கலவையில் ஆழ்வாருக்கு உள்ள பிரீதியை இப் பத்துப் பேசுகின்றது. முன்தசகத்தில் சொன்னதையே திரும்பச் சொல்வதுபோல் தோற்றினாலும் இத் தசகத்தின் கருத்து வேறானதால் குற்றமில்லை. பக்தர்கள் தாம் அநர்ஹரென்று அவனைவிட்டு விலகினால் அவனுக்கு அது விபஸஹமாகது வென்று காட்டுமித் தசகம்.

IV மணவாள மாமுனிகள்:—

"வைகுந்தன் வந்து கலந்ததிற்பின் வாழ்மாறன்
செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து - நைகின்ற
தன்மைதனைக் கண்டுன்னைத் தான்விடேன் என்றுரை
வண்மையடைந் தான்கேச வன்" [க்க

என்று இப்பத்தை ஸங்கிரஹித்தருளியது கவனிக்கத்தக்கது.

V ஸ்ரீமந் வேதாந்ததேசிகர், "ஆச்ரதர் நம்மைக் கைவிடில் செய்வதென்" என்று பகவான் அதிசங்கைப் படுகிறானென்று ஆழ்வார் இத்தசகத்தில் நிரூபிக்கிறாரென்று ஸங்கரஹம்செய்தருளினர்.

---

2-ம் பாசுரம்.

சிக்கெனச் சிறிதோரிடமும்
    புறப்படாத் தன்னுள்ளே உலகுகள்
ஒக்கவே விழுங்கிப் புகுந்தான்
    புகுந்த தற்பின்
மிக்க ஞான வெள்ளச்சுடர் விளக்காய்த்
    துளக்கமற் றதமுதமாய் எங்கும்
பக்கநோக் கறியான்என்
    பைந்தாமரைக் கண்ணனே.

பதக் குறிப்புகள்:—சிக்கெனவே-முழுவதும், "தன்னுள் விழுங்கி" என்றால் "தன் ஸங்கல்பத்துக்குள்ளே உலகவியாபாரங்களை எல்லாம் அடக்கி முடித்துக் கொண்டு" என்பது தாத்பரியம். "மிக்க ஞான வெள்ளச்சுடர் விளக்காய்" அதிசயமான ஞானமாகிற ஆற்று ஒழுக்குப்போல் பிரவாஹமாகிய சுடர். இதற்குத் தாத்பரியம் (1) அதிசயமான ஞானத்திற்குப் பகவான் ஆச்ரிதன் (2) அவனே அதிசயமான சுவயம் ஞான சுவரூபன் என்று அவதாரிகை. இப்படித் தம்முள்ளே புகுந்தபின் எம்பெருமானுக்குப் பிறந்த ஸம்பூர்ணமான பெரும்பேற்றைப் பேசுகிறார்.

உரை:—எம்பெருமானுக்கு அஸாதாரணமாயுள்ள உலகசிருஷ்டி ரக்ஷணம் முதலான வியாபாரங்களை எல்லாம் அவன் முடித்துக்கொண்டு என்னுள் புகுந்து கலந்தான். புகுந்ததன்பின் ஞானுதி ஸகல கல்லியாண குணங்கள் பொருந்தினவனாய் அங்குமிங்கும் தன் கவனத்தை அசையவிடாமல் சந்தோஷத்தாலே விகஸித்த அழகு அதிகரித்த திருக்கண்களுடையவனாய் என்னையன்றிப் பக்கம்கூட நோக்கமுடியாதவனாய் நிற்கிறான். இங்ஙனம் அவனது பெரும்பேறும் சந்தோஷமு மிருந்தபடி" என்கிறார்.

——

3-ம் பாசுரம்.

தாமரைக் கண்ணனை விண்ணோர்
பரவும் தலைமகனைத் துழாய்விரைப்
பூமருவு கண்ணி எம்பிரானைப்
பொன்மலையை
நாமருவி நன்கேத்தி யுள்ளி
வணங்கிநாம் மகிழ்ந்தாட நாவலர்
பாமருவி நிற்கத் தந்த
பான்மையேய் வள்ளலே.

குறிப்புக்கள்:—நாமருவி = (நாம் + மருவி) நாம் சேர்ந்து, நன்கேத்தி-நன்றாகப் புகழ்பாடி - நாவலர் = (நா + அலர்) நாக்கிலே மலர்கின்ற, பான்மையேய் வள்ளல் - பான்மை - குணம் ஸ்பாவம், ஏய் - தகுந்தான, வள்ளல் -உதாரகுணமுள்ளபிரபு. முன் பாசுரத்திலுள்ள "பக்க நோக்கறியான்" என்பதிலுள்ள "அறியான்" என்கிறவினைமுற்றோடு இப்பாட்டில் இருக்கும் 'வள்ளல்' என்னுஞ் சொல்லைக் கொண்டுமுடிக்க.

பொழிப்புரை:-தாமரைப்பூவைப்போன்ற திருக்கண்களுடையவனாய் நித்தியஸூரிகள் ஏத்தும் பிரபுவாய் வாசனையுள்ள துளபமாலையை யணிந்தவனாய்ப் பொன் மலைபோன்றவனை நாம் அணுகி நன்றாகப் புகழ்பாடி மனதால் பக்தியுடன் சிந்தைசெய்து நமஸ்கரித்து நல்ல பாக்களால் பாடி மனமகிழ்ச்சியுடன் தேகமுழுவதும்ஆடி அநுபவிக்கத் தன்னைஎமக்குத்தந்த பெருமையனை பிரபு,நாம் மனோவாக்குக் காயங்களால்செய்யும் பூஜையைப்பெற்று அதிலேயே ஊன்றிக் கவனித்து வேறுபக்கத்தை நோக்கமுடியாதவனா யிருக்கிறான். நாம் இவ்வண்ணம் செய்யவும் அவனுக்குக் குறைவு வாராமலிருக்கிறதே இது என்ன ஆச்சரியம்—என்கிறார்.

——

4-ம் பாசுரம்.

வள்ளலே மதுசூதனா என்மரகத
மலையே உனைநினைந்
தெள்கல்தந்த வெந்தா யுன்னை
எங்ஙனம் விடுகேன்
வெள்ளமேபுரை நின்புகழ் குடைந்தாடிப்
பாடிக் களித்துகந் துகந்து
உள்ளநோய் களெல்லாம் துரந்துய்ந்து
போந்திருந்தே.

பதவுரை:— வள்ளலே - பிரபுவே, மதுசூதனா என் மரகத மலையே...உன்னை நினைந்து எள்கல்- உன்னிடத்தில் ஈடுபடுகையை, தந்த- எனக்குக் கொடுத்த, எந்தாய்-எனக்குத் தந்தைபோன்றவனே, வெள்ளமே- பெரிய பிரவாகத்தை, புரை - ஒத்த, நின் புகழ் - உன்னுடைய மஹத்தான கல்லியாண குணங்களில், குடைந்து - ஆடி - முழுகி, பாடிக் களித்து - சந்தோஷப்பட்டு, உகந்துகந்து - வெகு பிரகாரங்களாய் மனக்களிப்புப்பெற்று, உள்ள நோய்கள்-மனதின் வியஸநங்கள் எல்லாவற்றையும், துரந்து - துரத்திவிட்டு, உய்ந்து-மேல்செப்பிய உபாயங்களால் என்னுடைய ஜீவிதத்தைப் புனிதமாக்கிப் புதுஜந்மம் எடுத்தாப்போல், போந்து - உன் திருவடிகளிடத்தில் வந்து சேர்ந்து, இருந்து-அந்தத் திவ்விய திருவடிகளில் நிலைபெற்றிருந்தும் உன்னை எங்ஙனம் விடுகேன்- உன்னை ஒருபடியாலும் நான் விடமாட்டேன் "இது நிச்சயம்" என்கிறார்.

குறிப்பு:—நோய்கள்- (1)பகவானைப் பிரிந்திருப்பது ஒன்று (2) அநர்ஹன் என்று நினைத்துக்கொண்டு கலவாமல் நிற்கை, இரண்டு.

——

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடபல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜண்டுகள்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்


டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்ளுக்கு ரூ. (1-8-0)
பிரான்சு:
டிப்போ, பம்பாய்
கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD
மதுரை.
காஞ்சீபுரம்.



# குறுந்தொகை

[946-வது பக்கத் தொடர்ச்சி]

381

[குறிஞ்சி]

வரைவிடைவைத்துத் தலைமகன் பிரிந்துழி ஆற்றாளாய தலைமகளை ஆற்றுவிக்கலுற்ற தோழி தலைமகனை இயற்பழித்துரைத்தது.

தொல்கவின் தொலைந்து, தோணலஞ் சாஅய்,
அல்ல னெஞ்சமோ டல்கலுந் துஞ்சாது
பசலை யாகி விளிவது கொல்லோ,
வெண்குருகு நரலுந் தண்கமழ் கானற்
பூமலி பொதும்பர் நன்மலர் மயக்கி
விலங்குதிரை யுடைதருந் துறைவனொ
டிலங்கெயிறு தோன்ற நக்கதன் பயனே.

(உரை). வெண்ணிறத்து நாரைகள் கத்தும் குளிர்ந்த கானலிடத்துள்ள வாசனைபொருந்திய பூக்கள் நிறைந்த சோலையின்கண்ணே நல்ல நெய்தல் முதலிய நீர்ப்பூக்களைச் சிதைத்துவந்து மாறிமாறியுலவும் அலைகள் உடைந்து மறியும் கடற்றுறைவனோடு முன்பு நாம் ஒளிவிளங்கும் பற்கள் தோன்ற நகைத்து விளையாடியதன் பயனோ இப்பொழுது நமது பழைய அழகு கெடவும், தோளினழகு சிதையவும், துன்பம் பொருந்திய உள்ளத்தோடு ஒருநாளும் துயில் கொள்ளாது மேனியெங்கும் பசப்பூரவும் இவ்வாறு நாம் சாதல்தான்.

——

குறுங்கீரனார்] 382 [முல்லை

தலைமகன் வருவதாய்க்குறித்த கார்ப்பருவத்திலும் வாராமையால் வருந்திய தலைமகளைத் தோழி 'இது பருவமழையன்று வம்பமாரி' என்று கூறித் தேற்றியது.

கண்டுழிக் கொற்றம், பைங்கொடி முல்லை
முகைத்தலை திறந்த நாற்றம் புதன்மிசைப்
பூமலர் தளவமொடு தேங்கமழ் பூக்கால்
வம்பும் பெய்யுமார் மழைமே ; வம்பன்று
காரிது பருவ மாயின்
வாரா ரோநங் காத லோரே?

(உரை). பசிய கொடியாகிய முல்லையின் அரும்புகள் மலர்ந்த நாற்றமுள்ளதேனும், சிறு தூறுகளின்மீது படர்ந்த செம்முல்லைப்பூக்களின் மணமுள்ள தேனும் மழையைப் போலப் பெய்யாநிற்கும். (இதை நீ நிசமான மழையென்று மயங்கினாய்போலும்.) இது அத்தகைய தேன்மழையேயன்றிக் கார்காலத்து மழையாயின்,வெற்றியைப்பெற்றதும் நமது காதலர் மீளாதிருப்பாரோ; இரார்.

கண்டுழிக்கொற்றம் - கொற்றங்கண்டுழி; வெற்றிகொண்டுழி ; காணல் - செய்தல், உண்டாக்கல். நாற்றம், வம்பு - (ஆகுபெயர்) மணமுள்ளதேன். மார் - அசை. வம்பன்று - வம்பன்றி ; வம்பமாரியன்றி. பருவம் - (ஆகுபெயர்) பருவமழை.

——

படுமரத்து மோசிகீரனார்] 383 [பாலை

தலைமகளை உடன்கொண்டு போவதற்குத் தலைமகனை நேர்வித்த தோழி அதனைத் தலைமகளுக்கு உணர்த்தி அவளை உடன்போக்கு வலித்தாளுக்குத் தலைமகள் தானதற்கு நாணினமை தோன்றக் கூறியது.

'நீயுடன் படுதலின் யான்தர வந்து
குறிநின் றனனே குன்ற நாடன்;
இன்றை யளவை சென்றைக்' கென்றி,
கையுங் காலும் ஒய்வன வொடுங்கித்
தீயுறு தளிரி னடுங்கி
யாவதும் இலையான் செயற்குறி யதுவே.

(உரை). 'நீ முன்பு ஒருவாறு சம்மதிக்க, உன்னை உடன் அனுப்புகிறேன் என்று நான் சொன்னதால் தலைமகன் வந்து குறித்தவிடத்தில் நிற்கின்றான். இன்றிரவின் எல்லைக்குள் நீ அவனுடன் செல்வாயாக' என்று சொல்லி நீ என்னை வலிக்கின்றாய். அதைக் கேட்டதும் (நாணத்தால்) எனது கையுங் காலும் செயலற்று ஒய்வனவாகித் தீயையுற்ற தளிரைப்போல வெம்பி வாடி நடுங்கினமையால் நான் செயற்குரியது யாதொன்றுமில்லை. (நீ எவ்வாறு சொல்லுகின்றாயோ, அவ்வாறே நான் செய்கின்றேன்.)

சென்றைக்கென்றி - (விகாரம்) சென்றைக்க என்றி; சென்றைக்க - செல்க.

——

காம்போதியார்] 384 [மருதம்

பரத்தையிற்பிரிந்து மீண்டுவந்து தன்னை வாயில்வேண்டிய தலைமகனுக்குத் தோழி வாயின்மறுத்து உரைத்தது.

உழுந்துடைக் கழுத்திற் கரும்புடைப் பணைத்
நெடும்பல் கூந்தற் குறுந்தொடி மகளிர் [தோள்
நலனுண்டு துறத்தி யாயின்
மிகநன் றம்ம மகிழ்ந்த சூளே.

(உரை). உழுந்துபோன்ற நீலமணிவடத்தை அணிந்த கழுத்தினையும், கரும்பினழகைக்கொண்ட பருத்த தோள்களையும், நீண்ட பலவாகிய கூந்தலையும், குறுகிய வளையல்களையணிந்த கையையும் உடைய பரத்தைமகளிரின் இன்பத்தைத் துய்த்துவிட்டு அவர்களைத் துறந்திடுவாயாயின், 'உம்மைவிட்டுப் பிரியேன்' என்று நீ அவர்களிடம் சூளுற்று உரைத்தமொழி மிகவும் அழகாயிருக்கும் அன்றோ? (உனது சூளுறவு பொய்க்காமைப்பொருட்டு நீ அவரிடத்தே மீள்வாயாக.)

'உழுந்து', (உவமையாகுபெயர்). கரும்பு - (ஆகுபெயர்) கரும்பின் அழகு. கழுத்தின், தோள், கூந்தற் தொடி மகளிர் என்றமையால் இயற்கையழகாலுஞ் செயற்கையழகாலும் ஆடவரை மயக்கித் தம்வயப்படுத்தும் பரத்தை மகளிர் என்றதாயிற்று. சூள் - சபதம், சத்தியம்.

——

கபிலர்] 385 [குறிஞ்சி

வேற்றுவரைவை மாற்றும்பொருட்டு, சிறைப்புறத்தானாக தலைமகன் கேட்குமாறு தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

பலவிற் சேர்ந்த பழமா ரினக்கலை
சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇச்
செருவுறு குதிரையிற் பொங்கிச் சாரல்
இருவெதிர் நீடமை தயங்கப் பாயும்
பெருவரை யடுக்கத்துக் கிழவன் என்றும்
அன்றை யன்ன நட்பினன்;
புதுவோர்த் தம்ம,இவ் வழுங்க லூரே.

(உரை). பலாமரத்தின் பழத்தையுண்ணும் முசுக்கலையின்கூட்டம் நாணொலிஇசைக்கும் வில்லையுடைய கானவன் எய்த கூர்மையான அம்பையஞ்சிப் போர்க்குதிரையைப் போல மேலெழுந்து சாரல்களிலுள்ள மூங்கிலின்மேல் அது அசையும்படி தாவும் பெரிய மலைநாடன் நம்மிடத்து முன்னாளில் வைத்த அன்பு மாறாதவனாக எப்பொழுதும் இருக்கின்றான். ஆனால் ஆரவாரத்தோடு கூடியஇவ்வூர் (வரைவினை வேண்டிவரும்) புதியாரை உடையதாய் இருக்கின்றது.

சிலைவில்: சிலைத்தல் - ஒலித்தல்; சிலைமரத்தாற் செய்த தண்டினையுடைய வில் என்றுமாம். வெதிர் அமை - இரு பெயரொட்டு. தயங்க - அசைய, ஆட. அன்றை - முதன் முதற் கூடிய தலைநாளைச் சுட்டிநின்றது. புதுவோர்த்து - புதியாரை உடையது.

உள்ளுறை:—பலாப்பழத்தை உண்ணலுற்ற முசுக்கலை கானவன் கணையையஞ்சி அகன்றிட்டாற்போலத் தலைமக னும் தன்னை வரைந்துகொள்ள முயலாது தனது தமை யன்மாரை யஞ்சி அகன்றிட்டான் என்று தலைமகள் குறித்த வாறும்.

---

வெள்ளிவீதியார்] 386 [முல்லை

தலைவனது நெடும்பிரிவிடை மாலையம்பொழுது கண்டு வருந்திய தலைமகள், தன்னை வற்புறுத்தி ஆற்றுவித்த தோழிக்குச் சொல்லியது.

வெண்மணல் விரிந்த வீததை கானல்
தண்ணந் துறைவன் தணவா வூங்கே
வாலிழை மகளிர் விழவணிக் கூட்டும்
மாலையோ அறிவேன் மன்னே; மாலை
நிலம்பரந் தன்ன புன்கண் ணுடைத்
புலம்புடைத் தாகுதல் அறியேன் யானே.

(உரை). வெண்மணல் பரந்து பூக்களடர்ந்த கானலோடு கூடிய குளிர்ந்த அழகிய கடற்றுறைவன் நம்மைக் கூடாது பிரிந்ததற்குமுந்தியகாலத்தில் நல்லஅணிகலன்களையணிந்த மகளிர் காமவிழாவைக் கொண்டாடும் ஒப்பனையைப்புரியும் மாலைக்காலத்தை அறிவேன்; (அஃதன்றி)நிலமெங்கும் பரந் தாற்போன்ற துன்பத்தோடுகூடிய தனித்திருத்தலாகிய துயரத்தையுடைய மாலைப்பொழுதை நான் ஒருபோதும் அறியேன். அதுவோ இப்பொழுது கழிந்தது. (அவனது பிரிவால் இதுவே இப்பொழுது நிலைக்கலாயிற்று.)

மன்னே-கழிவிரக்கத்தின்கண் வந்தது.

---

கங்குல்வெள்ளத்தார்] 387 [முல்லை

எல்லை கழிய முல்லை மலரக்
கதிர்சினந் தணிந்த கையறு மாலை
உயிரை வரம்பாக நீந்தின மாயின்
எவன்கொல், வாழி தோழி,
கங்குல் வெள்ளங் கடலினும் பெரிதே.

(உரை). தோழீ, உயிர்வாழ்தலாகிய கரையைக் காணும் பொருட்டு நாம், பகற்போது நீங்கி, சூரியன் வெம்மை தணிந்து, முல்லையரும்புகள் மலரவும், துணைவரைப்பிரிந்து தனிமையுற்றார் செயலற்றுக் கவன்று வருந்தவும் வந்த மாலைப் போ(தாகிய சிறு குட்டத்)தை ஒருவாறு நீந்திக்கடந் தேமாயினும், இராப்பொழுது கடலைக்காட்டிலும்பெரியதே; அதனை எவ்வாறு கடப்பாம் யாம்?

கதிர் - சூரியன். சினம் - வெம்மை, சூடு. உயிர் -(ஆகுபெயர்) உயிர் வாழ்தல். வரம்பு - எல்லை, கரை. ஆயின் (உம்மைத் தொகை) ஆயினும். எவன் கொல் - 'நீந்துவது எவன் கொல்'என்று ஒருசொல் வருவிக்க. கங்குல்வெள்ளத்தைக் 'கடல்' என்றதற்கேற்ப 'மாலை'க்காலம் குட்டம்என்று உரைக்கப்பட்டது.

---

ஔவையார்] 388 [பாலை

தலைமகள் தன்னுடன்போகத் துணிந்ததைக் கேட்டுச் சுரத்தின் வெம்மையையும் தலைமகளின் மென்மையையும் நினைத்துச் செலவழுங்கலுற்ற தலைமகனைத் தோழி அழுங்காமல் தேற்றியது.

நீர்கால் யாத்த நிரையிதழ்க் குவளை
கோடை யேறினும் வாடா தாகும்;
கவணை யன்ன பூட்டுப் பொருசா
உமண ரொழுகைத் தோடு நிரைத்த
முளிசினை பிளக்கு முன்பின் மையின்
யானை கைம்மடிந் துயவுங்
கானமும் இனியவாம் நும்மொடு வரினே.

(உரை). வற்றாதபடி நீர் தனது தாளிற் கட்டப்பெற்ற இதழ்களின் வரிசையையுடைய குவளைமலர் கோடையின் வெப்பம் மிகினும் வாடாதாகும்; அதுபோல, அவள் உம்முடன் வருவாளாயின் * * * உப்புவாணிகர் வண்டிகளின் தொகுதியை வரிசையாகச்சேர்த்து நிறுத்திக் கட்டிய காய்ந்த மரத்தறிகளைக்கூடப் பிளந்தெறியும் வலியின்மையால் யானை கையோய்ந்து வருந்தும் (கடுங் கோடையால் வெந்தழிந்த) சுரமும் (உமது தண்ணளியும் அன்பும் தனதுள்ளத்தையும் உடலையுங் குளிர்வித்தலால் வெம்மை நீங்கி) தலைமகளுக்கு இனியவாகும்.

கால்—தாள், தண்டு. கவணை......பொருசா—இவ்வடியின் பொருள் புலப்படவில்லை; சொற்கள் தொடர் பின்றிச் சிதைந்துகிடக்கின்றன. உமணர்—உப்புவிற்போர். ஒழுகை - வண்டி. தோடு - தொகுதி. முன்பு - வலிமை. 'யானை...கானம்' என்றது, நீரும் நிழலுந் தழையும் இல்லாமையால் அச் சுரத்தில் கோடையாலும் பசியாலும் யானைகள் சிறுதறிகளையும் முறிக்கமாட்டாதபடி அவ்வளவு வலியற்றிருந்தன என்றவாறும்.

---

வேட்டக் கண்ணனார்] 389 [குறிஞ்சி

வரைவுடன் வந்த தலைமகனைத் தலைமகளின் தமர் வரைவெதிர்ந்ததைக் கேட்டறிந்த தோழி அதனைத் தலைமகளுக்கு உணர்த்தியது.

நெய்கனி குறும்பூழ் காய மாக
ஆர்பதம் பெறுக, தோழி, அத்தை,
பெருங்கல் நாடன் வரைந்தென அவனெதிர்
நன்றோ மகனே யென்றலின்
நன்றே போலு மென்றுரைத் தோனே.

(உரை). தோழீ, மலைநாடனாகிய தலைமகன் வரைபொருளுடன் வந்து மணம் வேண்டினனாக 'அவனை உனது தமர் எதிர்கொண்டு ஏற்றது நன்றோ மகனே' என்று நான் அவனுடைய குற்றேவல்மகனைக் கேட்டபோது, அவன்'நன்றே போலும்' என்று மறுமொழி தந்தனன். அதற்காக அவன் நிணமுருகிய காடைக்கறியாகிய கருணையுடன் உண்ணுஞ் சோற்றைப் பெறுவானாக.

நெய் - நிணம். குறும்பூழ் - காடை. காயம் - (ஆகுபெயர்) பெருங்காயம் மிளகு முதலியவற்றைச் சேர்த்துச் சமைக்கும் ஒருவகை பொறிக்கறி; 'குழம்பு' என்றுமாம். அத்தை - ஓரசைச்சொல். பெருங்கல் - மலை. அவனெதிர் - அவனை எதிர்வு, வரைவெதிர்ந்தது; எதிர் - முதனிலைத் தொழிற் பெயர்.

---

உறையூர் முதுகோற்றனார்] 390 [பாலை

தலைமகளுந் தலைமகனும் புணர்ந்துடன்போயினாரை இடைச்சுரத்துக் கண்டார் பொழுதின் செலவும் பகையுங் காட்டிச் செலவு விலக்கியது.

எல்லு மெல்லின்று; பாடுங் கேளாய்,
செல்லா தீமோ சிறுபிடி துணையே;
வேற்றுமுனை வெம்மையிற் சார்ந்துவந்
வளையணி நெடுவே லேந்தி, [திறுத்தென,
மிளைவந்து பெயருந் தண்ணுமைக் குரலே.

(உரை). பகலும் ஒளிமங்கியது; பகைவர்படை உருத்தெழுந்து வந்து சார்ந்து தங்கிற்றென்று காவற்காட்டில் வந்து பெயருந் தண்ணுமையின் குரல் இசைத்தலையும் கேட்பாயாக, வளைகளையணிந்த சிறிய பிடியைப் போன்ற இம் மகளின் நெடிய வேலையேந்திய துணைவா.ஆகையால் இனி மேற்செல்லுதலை நீங்கள் தவிர்வீராக.

எல் - பகல்; சூரியனுமாம். பாடு - படுதல், ஒலித்தல். 'தண்ணுமைக் குரல் பாடுங் கேளாய்.'என்று கூட்டுக. வளையணி சிறுபிடி, நெடுவேலேந்தி துணையே என்று இணைத்துக்கொள்க. மிளை - காவற்காடு.

---

பொன்மணியார்] 391 [முல்லை

தலைமகன்மீள்வதாகக் குறித்துச்சென்ற கார்காலத்திலும் வாராமையால் ஆற்றாது வருந்திய தலைமகள் அது பருவம் அன்றென்று கூறித் தன்னை வற்புறுத்தித் தேற்றலுற்ற தோழிக்கு எதிரழிந்து சொல்லியது.

உவரி யொருத்தல் உழாஅது மடியப்
புகரி புழுங்கிய புயனீங்கு புறவிற்
கடிதிடி யுருமிற் பாம்பு பையவிந்
திடியொடு மயங்கி இனிதுவீழ்ந் தன்றே,
வீழ்ந்த மாமழை தழீஇப்
பிரிந்தோர் கையறப் பையுள் மாலைப்
பூஞ்சினை யிருந்த போழ்கண் மஞ்ஞை
தாநீர் நனந்தலை புலம்பக்
கூஉம், தோழி, பெரும்பே தையவே.

(உரை). புள்ளியையுடைய மான்கள் வெப்பத்தாற் புழுங்கிய மேகம் நீங்கிய முல்லைவைப்பில் களர்நிலத்தில் ஆண்கேழல் கிழங்கை அகழ்ந்தெடுப்பதற்காகப் பூமியை உழாது சோம்பிக்கிடக்கும்படியும், கடிதாக இடிக்கும் இடியினால் பாம்புகள் படமொடுங்கிச் சோர்ந்து விழும்படியும் இடியோடுகூடிய மழை மயில்முதலிய பறவைகள் இன்புறும்படி பெய்தது; அவ்வாறு விழுந்த மழையைத் தழுவித் துன்பத்தை விளைக்கும் மாலைப்போதில் பூமரக்கிளையிலிருந்த கண்டார் கண்ணைப்பறிக்கும் அழகுவாய்ந்த (பீலியையுடைய) மயில்கள்,(துணைவரைப்) பிரிந்து (தனித்து) உறையும் மகளிர் செயலற்று வருந்தும்படி தாவிப்பாயும் அருவிகளையுடைய விசாலமான குன்றிடங்களில் எதிரொலி எழுமாறு கூவுகின்றன. தோழீ, (இது பருவமழை அன்றென்று நீ சொல்வது உண்மையாயின்) இப்பாம்பும் மயிலும் மிகவும் அறிவில்லாதனவே ஆகும்.

உவரி - உவர்நிலம், களர்நிலம். ஒருத்தல்-இங்குப் பன்றியின்ஆண். மடிய - மடி, சோம்பல். புகரி - புகர், அதாவது புள்ளிகளை உடைய மான். புறவு - புறவம், முல்லைநிலம். மயங்கி - மயங்க. போழ்கண் - கண்போழ்; (கண்டார்) கண்ணைப்போழும், பிளக்கும்.

இம்மழையின் இடியால் பாம்புகள் மயங்கின; மயில்கள் கூவும்; ஆதலால் அவையும் தன்னைப்போலப் பெரும்பேதையவே என்றாள் என்க.

---

# வாழ்வின் பயனும் கருமமும்

189133

## (John Ruskin)

[ரஸ்கின் என்னும் புலமையிற்சிறந்த ஆங்கிலப் பெரியாரைக் கலாநிலய வாசகர்கள்அறிவார்கள். 'வாழ்வின் பயனும் கருமமும்' என்னும் தலைப்பின்கீழ், கடவுளதுபெருமை விளங்குமாறு வாழ்வதே வாழ்வின் பயன் என்றும், உலோகாயத முயற்சியால் நாம் நிறைவுடையவகையில் வாழ்ந்தவர்களாகமாட்டோம் என்றும் விளக்கும் கருத்துடைய அவரது கட்டுரையொன்று ஈண்டு மொழிபெயர்ந்து வருகின்றது.]

மனிதன் பிறந்ததால் ஏற்படவேண்டிய பயனும் அவன் பின்னர் ஆற்றவேண்டிய கருமமும், கடவுளது பெருமைக்குக் கரியாக விருப்பதும், பின்னர் அக்கடவுளது பெருமை நெடிது வளரவேண்டியவகைக் கருமத்தைக் கைக்கொள்வதுமாகும். அன்னதற்குத் தன்னடக்கமும் அப்படிச் செய்வதால் ஏற்படும் சந்தோஷமும், அவசியம்.

இந்த வொருகருமத்தை நிறைவேற்றிவைக்குமாறு நிகழ்த்துபவைக ளெல்லாம், அதாவது கடவுளது பெருமையை நம்முன்னே அதிகப் பிரகாசமுடன் விளங்கச் செய்வதற்கானவைக ளெல்லாம், நமக்கு மிகவும் பயன் தருபவைகளே. பயன் (use) என்னும் பதத்தைத் தொன்மையும் இயற்கைப்பொருளும் கெடாதமுறையில் நான் உபயோகப்படுத்துகின்றேன். நாம் வாழ்வதற்கு உபயோகமான பொருள்களை நாம் பயனுடையவை என்று சொல்வது சாதாரணமாகக் கொள்ளப்படும் பொருளாகும். அப்பொருள் இழிவானதும், தொன்மைக்கு விரோதமானதும் ஆகும். வாழ்தலிலேயே குறிவைத்துப் பொருள்களின் பயனைக்கருதுவது பயனற்றது மல்லாமல், கேடு கெட்டதுமாகும். இப்படிக் கருதி வாழ்க்கையின் பயனைக் கெடுப்பதைக்காட்டிலும் மனிதன் வாழாது மடிதலே நலமாகும்.

ஆனால் விரைந்தலையும் இந்நாளில் மனிதர் பேசுவதோ வேறாயிருக்கின்றது. அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்றும் பேசவில்லை. உள்ளத்தோடு இயைந்தேபேசுகின்றனர். வீடும் வாயிலும், நிலமும், உணவுப் பொருள்களும், உடைகளும் ஆயவற்றைத் தான் பிரயோசனமுடையவைகள் என்று கருதலாகின்றனர். காட்சியும் கருத்தும் மனவுவகையும் தருபவைகளோ பயனற்றவைகளாம். என்ன பேதைமையிது. இப்படி விவகரிப்போர் தங்களைப் பயனுடையவற்றின்பால் கருத்துடையோர் (Utilitarians) என்று ஆணவத்துடன் அழைத்துக்கொள்கின்றனர். உபயோகமானவைக ளிடத்திலேயே முற்றிய கருத்துடைய இன்னார் இயலுமானால், தங்களையும் மனித ஜாதியையும் உண்ணுவதற்கான காய்கறிகளாக மாற்றிக்கொண்டு விடுவார்கள்போலும். உயிரினும் உயர்ந்ததாகப் புலாலைக் கருதுபவரும், உடலினும் மேம்பட்டதாக ஆடையாதிப் பொருள்களைக் கருதுபவர்களும் இவ்வுலகைக் குதிரைலாயமாகவும், பழவர்க்கங்களை உணவுப்பொருளாகவும் கருதுபவர்களும், தாம் அறக்கும் நெல்லையும் பறிக்கும் பழங்களையும் ஈடன்மலைச் சாரலில் வனதேவதைகள் வதியும் வளமிகு பொழிலினும் உயர்ந்தனவாகக் கருதுபவர்களும், அடுப்பிற்கு விரகும் சமைப்பதர்க்கு நீரும் எவ்விடத்திலும், எப்பொருளிலும் தேடுபவர்களே யாவார்கள். அவர்களுக்கு, கடவுளது நிழலென அம்மலைச்சாரலைப் புனையும்பொழிலும், கடவுளது நித்தியத்தில் நகர்ந்துசெல்லும் நெடியநதிகளும், விரகு

வெட்டுவதற்கும், குடிநீர் எடுப்பதற்கும் ஆன சாதனங்களேயாகும். ஒரு சமயகுரவர் சொல்லியபடி, கடவுள் உலகத்தைப் படைத்தபொழுது, உலகப்பொருள்களையெல்லாம் மிகவழகுடையதாகச் செய்தபோதிலும், உலகத்தை மனிதனது உள்ளத்திலும் இயற்றுவித்து, தமது கருமும், அன்னதின் முடிவின் பயனையும் எவரும் அறியாவண்ணம் செய்துவிட்டார். உள்ளத்தில் வைத்த உலகமும் உலோகாயதமாய் மாறி இழிந்துவிட்டது.

மனிதனை எருதாக்கிப் புல்மேயச் செல்வித்த நேபி குட்நெட்ஸர் என்னுங் கயவனது சாபம் தேசீயச் செல்வாக்கென்றும் சமாதானம் என்றும் வளர்க்கப்படும் முயற்சியை மிக நெருங்குகிறதென்றே நினைக்கின்றேன். பல தேயத்தினர்களின் குழப்பத்திலும் வாழ்க்கைப் போராட்டத்திலும், கட்டுப்பாட்டுக் குலைவினுல் வரும் வன்மையின்மையிலும், அனுபவமுதிற்சியில்லா இளமையிலும் ஜனங்களுக்கு உயர்ந்த எண்ணங்களும், நம்பிக்கையும் இருக்கின்றன. ஏனெனின் கஷ்டத்தினின்றுதான் நிலையுளமனம் எழுகின்றது; விடுதலையினின்றுதான் (Salvation) நன்றியறிதல் உள்ள மனம் வருகின்றது; சகிக்கும் பயிற்சியாற்றான் எதையும் விருப்பு வெறுப்புக் கொள்ளாது ஏற்கும் ஒரு மனநிலை பிறக்கின்றது; பந்தத்தினின்று விடப்பெறுங்காலைதான் (Deliverance) தெய்வநம்பிக்கை ஏற்படுகின்றது. மனிதர் கடவுளது விதியின்பால் நின்று, பிறரிடம் மரியாதையுடனும், நியாயமாகவும், நேர்மையோடும் வாழக் கற்றுக்கொண்டு, புறமிருந்து தாம்தேடிக்கொள்ளும் துயரங்களை அகற்றிவிடுவார்களேயானுல் போதும். அப்படிச் செய்பவர்களுக்கும் ஓய்வுடைய இந்நிலையினிலிருந்து மிகமிகக் கொடிய துன்பங்கள் பல எழுவனபோல் காணப்படலாம். அப்படி ஏற்படக்கூடிய அத்துன்பங்கள் கஷ்டத்தைத் தரலாம் என்றுலும், மனத்திற்கு ஓயாத்தொல்லையையோ தரா; அவைகள் நமது இரத்தத்தைக் குடிக்கலாம், என்றுலும், நாம் இரத்தத்தைச் சிந்தமாட்டோம்; உள்ளத்தை அவை வறட்டிவிடலாம், என்றுலும் நம்மை வதைக்கா. எனவே, நம்மை அமைதியுடன் வாழுமாறு நிகழ்த்திவைக்க வருமந்த நன்னிலை வாழ்த்துதற் குரியதே. எனினும், அந் நன்னிலையும், கத்தியையும் இராஜத்துரோகப் பிரசங்கத்தையும் விடக்கேடுடைய பலவற்றை நிகழ்ந்திவைத்தல்கூடும். இத்தகையநிலை கடவுளின் ஆணைக்கு நாம் அடங்கி நடக்கவேண்டு மென்பதை மறக்கச் செய்துவிடலாம். ஏனெனில் நமக்குக் கிடைக்கும் உணவும் குடிநீரும் தானுகக் கிடைக்கும் இயற்கைவழியெனக் கொள்ளப்படலாம். அவன் அருளினுல் நம்மைப் பரிவுடன் புரந்துவருவதையும் மறந்துவிடுவோம். நமக்குக் கிடைப்பதெல்லாம் இயற்கைவிதியாக மாறிவிடும். மறுமை எண்ணமும் மனமிருந்து அகன்று விடலாம். பக்திக்குப் பதிலாக அகம்பாவம் பிறந்துவிடலாம். கருணையெல்லாம் தற்புகழ்ச்சியில் மறைந்துவிடும். வண்மை குறையும், பொறுமை சோம்பலாய் விடும். நல்லவை அகல, வேடிக்கையும் சிறு எண்ணங்களும் தழைத்தோங்கலாம். வாழ்க்கையின்பால் தெய்வஒளி உளதெனினும் புயற்காற்று ஒன்றும் அடிக்காது இருக்கவில்லை. எனவே ஓட்டமிலாதபடி எழும் ஓய்வான நன்னிலையில், நாம் அடைவது கல்லையும்மரத்தையும் போன்ற வொரு ஓய்வாக அமையாவண்ணம் நம் காத்துக் கொள்ளவேண்டும். மழைக்கும் காற்றிற்கும்இடிக்கும் அஞ்சாது தன்னிலை காத்துக்கொள்ளும் இயல்புடையது கல்லாயினும், மழை நின்றதும் அக்கல் புல்லால் மூடப்படுகின்றது; பாசி அதைத் தின்றுவிடுகின்றது, உழுகலப்பை அதை அகற்றிவிடுகின்றது; பின் அது மண்ணுடன் மண்ணுய்விட வேண்டியதுதான்.

இவ்வண்ணம் நாம்இழிவுருதபடி நம்மைக் காத்துக் கொள்ளவேண்டும்.... ......நாம் வாழ்தல் என்பதின் பொருள் என்னவென்றுல், யாரால் நாம் உயிருடன் வாழ்கின்றேமோ அவனை அறிவதே. இல்லையேல் வாழ்விற்குப் பொருளில்லை. அவனது அழகிய சிருஷ்டியைக் கெடுத்துவிடும் கூட்டத்தாலுங் நடமாட்டத்தாலும் புரட்சியாலும் நாம் அவனை அறியமுடியாது. நடமாட்டமில்லாத் தனிமையிலும், மனிதர்களுக்குக் கடவுள் அளித்துள்ள வளமுடைய புத்தியாலுமே, அவனை நாம் அறியவேண்டும்.

---

அன்புடையீர்,

தங்கள் அடுத்த ஆண்டுச் சந்தாவை இப்பொழுதே மணியார்டர் மூலமாக அனுப்பும்படி வேண்டுகின்றேம். அது எங்கள் கார்யாலயத்திற்குப் பெரு உதவியாகும்.

"மானேஜர்"



# கம்பராமாயணர்

## அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[955-வது பக்கத் தொடர்ச்சி]

யாவருஞ் செல்நெறி இராமனுஞ் சென்று னன்றே.

தயரதனுடன் அவன் மாமனையாட்டியையும் மான்பிலாச் சூழ்ச்சியுள் தேய்த்தழித்து, வசிட்டனே முதல் மன்னவனுழையராய பெருந்தகைமக்களும் சிறியன சிந்தித்தாரோ என்னுமோர் ஐயத்திற்காளாக்கும் ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியாரது 'சுல்கச்சூள்' கொள்கை இராமனைத்தான் எற்றுக்குச் சும்மாவிட்டதோ அறிகிலேம். அவருடைய கருத்தின்படி பரதனுக்குப் பிற்றைநாள் இச்செய்தியை எடுத்துரைத்தது இராமனே யாக, என்றைக்கு எவர்வயின் அதனையவன் அறிந்தவனுயினுன் என்பது தெளியஇயலாவரை வேந்தளித்த முடியினை ஏற்பதற்கு இசைந்தவந்நாளிலேயே அவனதனை அறிந்திருந்தானென்று கருதுதற்கு இடமுளதாதலின் பரதனுக்கே யன்றித் தனக்குரியது அல்லாத அரசினை அடைதற்கவனவாவிய குற்றஞ்சென் றவனைச் சூழாதொழித லருமையன்றே. மற்று, முன்னரே தெரிந்திருந்தாலோ இராமனே ஒருபோதும் அவ்வரசிற் கிசைந்திரான் என்பார் ஸ்ரீமான் பாரதியார். அறநெறி மாறபாட்டா அவனது இயற்கையின் தூய்மையைத் தயரதனும் அறிவானென்பர். ஆயினும், முடிபுனை திருவினை முடிந்தபின்னர் இச் சுல்கச்சூள்வரலாறும் அதன்படி கோசலப்பேரரசு பரதனுக்கே பிறப்பினு லுரியதாவதும் இராமனுக்குத் தெரியவந்திடின், பிழையினுல் தான்பெற்ற அரசினிற் றங்காது பெயர்த்து மதனைப் பரதனுக்குக் கொடுத்துவிடமாட்டானே என்னின்,—

> "அரசு பரதனுரிமை யென்பதைச் சிறிதேனும் இராமனறிவனேல், பின் அதனை அவன் ஏற்கவொல்லான்; அவனை இணக்க யாராலும் ஆகாது. வைராக்கிய மிகுந்த இராமன் குணமறிந்த தந்தை அவனுக்குத் தன்தவறு வெளிப்பட்டுத் தனதெண்ணந் தடைப்படுமுன் அபிஷேகத்தை முடித்துவிட அவாவுகின்றுன். முடிந்தபின் இராமன் அதை அழிக்கமுடியாமை கண்டு அடங்கி யமைவான். பரதன் அதைப் பெரிதுமுவப்பான். இறைமைக்கு உரிமைமேற்கொண் டிகலற்குரிய இவ்விருவரும் அமையவே, "முடிந்தது முறை" யெனும் அறமறியும் பரதன்பாங்கினரும் இராமன் முடிசூட்டை வெறுப்பி[illegible]னும் மறுக்க முயலார்."

எனத் தயரதன் மதித்திருக்கலாமென்று பாரதியார் ஊகிக்கின்றனர். இராமனுடைய குணத்தை அறிந்த தந்தை இவ்வாறுமதித்தான் என்று இயம்புகின்றுராதலின் அவன் குணம் அன்னதென்றே ஸ்ரீமான்பாரதியாரும் கொள்கின்றனரென எண்ணல்வேண்டும். ஆயின் சுல்கச்சூள் கொள்கை, சுமந்த முடியை எடுக்க முடியாமைபற்றி அடங்கியமையும் பான்மையிற் கொண்டுபோய்இராமனை வைக்கின்றது. "அறத்தை மறத்தலும் துறத்தலும் அறியாச் சிந்தையன்" என்று ஸ்ரீமான் பாரதியாரால் பாராட்டப்பெறுகின்ற இராகவன், பரதன் பாங்கினரோடு 'முடிந்தது முறை' (Factum Valet) என்னும் வழக்கு நெறியையா பின்பற்றி வாழ்வான். காலஅவதி ஆய்விட்ட கடனைக் கொடுக்க வேண்டுமென்ற நியதியில்லை என்பதுபோன்ற அவலநெறிகளுடைய வழக்குமுறையைப் பற்றிக்கொண்டு, தன்தலைமேல் பழுத்தமுடியை அழிக்கமுடியாதென்று அடங்கிவிடுபவன் இராமனுனல் அவன்பெருமை அதிகமன்று. அன்னையோ தனக்கென அரசினைப் பெற்றுவைக்க அவ்வரசுமோ பிறப்பினுல் தனக்கே உரியதென்று உணர்ந்தபின்னும், "நீயே கொள்' என்றதனைத் தன் முன்னவற்கு வற்புறுத்தியளித்த பரதனினும் இராமன் குணத்தால் குறைந்தவனென்னக் கொண்டாலன்றி, தந்தையளித்த அரசை அது பரதனுங் குரியதென்றறிந்தபின்னும் தம்பிக்குக் கொடாது தானே தாங்குவா னவன் என்று முடித்தற்கு இடமில்லையே.

இவ்வண்ணம் கைகேயி ஒருத்தியின்பொருட்டுத் தலையெடுக்க வேண்டுகின்ற அச்'சுல்கச்சூள்' தான் கெடுக்க முயல்வாரையெல்லாம் கெடுக்க இயலாமையோடு, காக்கமுயல்வாரையும் காக்கவியலாததாய்த் தவிக்கின்றது. இத்தனைபாடு எற்றுக்கு! தயரதன்தான் பொய்ச்சூழ்ச்சிகள் நயந்து செய்தானென்றும், அச்சூழ்ச்சிகளை விழைந்த 'ஆற்றல்சால்' கோசலை மதியினுல் தன்மகனுக்கத்தை உவந்தாளென்றும், வசிட்டர் சுமந்திரர் முதலிய பல பெரியோர் சூழ்ச்சியிதனைத் தெரிந்திருந்தும் ஒவ்வினராகலாமென்றும், சூழ்ச்சியால் தன் மருகன் அடைந்த அரசினை உன்னிச் சனகனே நனிமிக மகிழ்வானென்றும் உரைத்துணர்த்தவேண்டியது இன்றியமையாததாகின்ற இச்சுல்கச்சூள் வாதத்திற்கு இராமனையுந்தான் இரையாக்கினுல் அது மிகையாமோ. காக்கவோ இயலவில்லை; மற்று இப் பொல்லாக்குழுவில் அவனையும் புகுத்திவிட்டால் சுல்கச்சூள் சித்திரம் குறைவற நிறைந்ததாமே. அப்படிப் புகுத்தவேண்டுமெனின் கம்பரது கவிகளுக்குள் படுகுழி அகழ்தற்குரியன சிலவுள. "நீ பிறந்துரிமையாதலால்" எனவரும் வாசகத்தை ஆதாரமாகவைத்துக்கொண்டு, அதற்கிணங்க,'கெடுத்தொழிந்தனை' என்னுஞ் செய்யுளிற்குப் பொருள்கண்டு ஏனைய கரிகளும் குறிகளும் ஏற்றபெற்றி அமைத்து வாதிக்கின்ற ஸ்ரீமான் சோமசுந்தரபாரதியாரவர்களது திறமையை அல்லாவிடினும் முறையையேனும் மேற்கொண்டு, பரதனுக்குரியதென்று முன்னரே தெரிந்திருந்தும் இராமனவ் வரசினை ஏற்றுக்கொள்ள இசைந்தனன் எனச் சாதிக்க முயலலாம். எவ்வாறெனின்:—

உத்தமனென்ன மதிக்கப்பெற்றிருந்த தயரதன் தன் மகன்மீதிருந்தவோ ரளவிறந்த வாசையால் தவறிழைக்கத் துணிந்ததுபோன்றே அம்மகனும் அரசின் மீது விளைந்தவோர் ஆசையால் பரதனுக்கே உரியதென்றறிந்திருந்தும் அதனை யேற்க ஒவ்வினுன். இப்படிச் சொல்வது இராமன்பால் வழிவழி வந்த பக்தியுடைய சிலரைத் துண்ணெனச் செய்யலாம். ஆயினும் "பொய்ந்நலம் பேசி மெய்த்தவறு காணுப் பராமுக மூடபக்திகள்" தாம், "எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள் மெய்ப்பொருள்" காண்பதற் கஞ்சும். ஆயினும் 'நடுநிலை வழுவாமல்' கம்பரது நூலை

ஆழ்ந்து படித்தபின் அக்கவிஞர்தம் கருத்து அன்னதே என்பதை எடுத்துக்காட்டுதல் கடனாகின்றது. கம்பர் எதனையும் 'வெச்சென' உரைக்காமல், அறியுநர் அறிமினென்று, சிறிது 'விநயமாகக்' கூறும் பெற்றியர். ஆயினும் தன் கருத் தின்னதென்று அறியவல்லார்க்கு யாதும் ஐயமில்லாவகை உணர்த்துவதற்குரிய பாசுரங்கள் இலவாகா. இந்திரசித்தன் ஏவிய பிரம்மாத்திரத்தால் உயிரழிந்துகிடந்த தம்பி இலக்குவனைக் கண் டாற்றாது பலபல பன்னிப் புலம்பலுற்ற இராமன்,

மண்மேல் வைத்த காதலின் மாதா முதலோர்க்குப்
புண்மேல் வைத்த தீநிகர் துன்பம் புகுவித்தேன்
பெண்மேல் வைத்த காதலி னிப்பே றுகள்பெற்றே
னெண்மேல் வைத்தே னென்புக ழியான்று னௌி
[யேனே

என விம்மினன் என்பர் கம்பர். இதனில் தான் மண்மேல் காதல் வைத்திருந்தனன் என்று இராமனே ஒவ்வுகின்றா னன்றோ. தனக்குரியதல்லாத அரசினை அடைய ஆசைப்பட்ட பாவத்தால் இலக்குமணனைப் போர்முனை கொணர்ந்து வீழ்த்தி மாதா முதலாயினோரைக் கரையற்ற துன்பத்தில் ஆழ்த்த நேர்ந்ததெனப் பிரலாபிக்கின்றான். குற்றமுள்ள நெஞ்சு அவனை இப்பொழுது அறுக்கின்றது. எல்லோரும் மாண்டுகிடக்கின்றனராதலால் தான் உரைப்பதை யாரும் கேட்க மாட்டார்கள் எனத் துணிந்து வாய்விட்டுச் சொல்லியேனும் தன்நெஞ்சைச் சிறிது ஆற்றிக்கொள்ளப் பார்க்கின்றான் இராமன். மண்மேல் வைத்த ஆசை என்பது தயரதன் உரைத்தவுடன் இராமன் மகுடத்தைத் தரிக்க இசைந்ததொன்றையே குறிக்க இயலும். மண்மேல் வைத்த ஆசையினால் இந்தத் தீமைகள் நேர்ந்தன என்பதால் . தனக்குரியதல்லாத தொன்றின்பால் அவன் ஆசை கொண்டதாக எண்ணுவது தவிர்த்து வேறு வழியில்லை. ஆதலால் இராமனே அரசு தனக்குரியதன்றென்றும் பரதனுக்கே உரியதென்றும் ஆதியிலேயே அறிந்திருந்தானென்பது வெளிச்சமாகிறது. கற்புக் கடனாற்றிய கைகேயியும் அவளை ஆற்றுவித்த கூனியும் ஆகிய இவ்விருவருமே இக்கதையினுள் நல்லவர்கள். மற்றவர்க்கு மறுவுண்டு.

இனி, இவ்வண்ணம் இராமன் கூறியதினின்றே அவன் பேராசைப்பட்டவனென்னக் கொள்ளற்கு இடமில்லையென்று, உண்மையைக் காட்ட வந்தாலும் தம் கண்களை மூடிக்கொள்கின்ற இயல்புடைய சிலர், இவ்வாறுகூறலாம். துயரமிகுதியால் தன்வயந் துறந்து இல்லாத பழியை ஏற்றுக்கொள்ளும் இயற்கைபற்றி நிகழ்ந்த இவ்விராமனது மாற்றத்தை நிசமென்று நினைக்கப்படாது என்பார்போலும் அவர். அப்படிச் சொல்லிக் கழித்துவிடுவதிற் பயனில்லை. "மண்மேல் வைத்த காதலின்" என்று இராமன் இங்குச் சொல்வதை நினைவில்வைத்துக்கொண்டு கம்பராமாயணத்தின் வேறு சில பாகங்களை ஆராய்ந்தால் அவனுங் கரவுடைய சிந்தையனா யிருந்தானென்பது பசுமரத் தாணிபோல் நிலைநிறுத்தப்படும். வசிட்டர் சுமந்திராதியோர் அடங்கிய அவையினோர்க்குத் தயரதன் தான் இராமனுக்கு அரசினை அளிக்க விழைவதைத் தெரிவித்து அவர்தந்த அநுமதியால்முறையலாவகைச் செய்யத்துணிந்தவனாகி இராமனை வரவழைத்து,

மன்னர் வானவ ரல்லர்மேல் வானவர்க் கரசாம்
பொன்னின் வார்கழற் புரந்தரன் போலிய ரல்லர்
பின்னு மாதவந்தொடங்கினோன் பிழைத்தவர் பிறரார்
சொன்ம ருமகற் பெற்றவ ருந்துயர் துறந்தார்

எனத் தன் சொல்லை மறுக்கப்படா தென்பதைப் பலவாறு வற்புறுத்திக் கூறிய பிறகு,

அனைய தாதலி னருந்துயர்ப் பெரும்பர மரசன்
வினையி னென்வயின் வைத்தன னெனக்கொளல்
[வேண்டா
புனையு மாமுடி புனைந்திந்த நல்லறம் புரக்க
நினைய வேண்டும்யா னின்வயிற் பெறுவதீது

என்று வேண்டிக்கொண்டனன். அப்பொழுது இராமன் இதற்கு எக்காரணத்தால் எவ்வாறு இசைந்தான் என்பதைக் கம்பர்,

தாதை யப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லுற்றில னிகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்தும்
யாது கொற்றவ னேவிய ததுசெய லன்றோ
நீதி யெற்கென நினைத்தமப் பணிதலை நின்றான்

என அவருக்கே உரிய அரியதோர்வகையில் எடுத்துக் காட்டுவாராயினர். 'காதலுற்றிலன் இகழ்ந்திலன்' என்றவரையில் கம்பர் நிறுத்திக்கொண்டதிங்குக் கருதத்தக்கது. இவ்வாக்கியத்தை மேல்நோக்காக நோக்குங்கால் இராமன் மகா உத்தமன்போல் தோன்றினாலும் வாஸ்தவத்தில் அவன் தன்மை அதுவன்றென்பது, "யாது கொற்றவ னேவியது அது செயல் அன்றோ நீதி" என்னும் நினைவில் முடியினைப் பெற்றனன் என்பதிலிருந்து அறிவுடையோர் அறிந்து கொள்ளலாம். பிறப்பினால் பரதன் உரியனாய் நின்றானையால் இராச்சியம் தனக்கு வரும் என்று ஒருபோதும் இராமன் எதிர்பார்த் திருக்கமாட்டான். அவ்வாறு அமைந்திருந்த ஒருநாளில் எதிர்பாராவண்ணம் தந்தை தன்னை அழைப்பித்து அரசினை அளிக்கின்றான். இப்படி எதிர்பாராத வொரு பேரரசு தன்கைவந்து தானாகவே புகுகின்ற இந்நிலையில் அவன் நெஞ்சம் படபடத் திருக்கும். ஆசையால் அதனை இறுகப் பற்றினன். ஆயினும் யாவரையும் மாற்றேற்றி விநயமாகக் கூறுகின்ற கம்பர் காதலுற்றிலன் என்கின்றார். காதலுறாத தன்மையோடு, தனக்குரியதல்லா வரசை அவன் வெறுத்திருக்கவுமன்றோ வேண்டும். அவ்வாறு வெறுத்திலன் என்று உரைப்பதால் காதல்கொள்ளாதிருந்த தன் உண்மை தளர்ந்துவிடுகின்றது. இவ்வரசினை ஆசைப்பட்டு ஏற்பதோ அல்லது வெறுத்து மறுத்துவிடுவதோ வென அவனுள்ளம் சிறிதுநேரம் ஊசலாடியிருக்கலாம். இறுதியில் ஏற்கவே துணிகின்றான். ஆனால் அவன் மனச்சாக்ஷியோ 'இது தகவன்று' என்று இடித்துரைக்கும். ஆதலால் அம் மனச்சாக்ஷிக்கு ஏதேனும் ஒரு வியாஜம் காட்டி அதனை அடக்கவேண்டும். அதுதான் "யாது கொற்றவன் ஏவியது அது செயலன்றோ எனக்கு நீதி" என்னும் போலிக்காரணம். "அரசன் கட்டளைக்கு எல்லாரும் அடங்கி நடக்கவேண்டும். இப்பொழுது அரசனே இதனை ஏவியிருக்கின்றான். பரதனுக்கு அரசு உரியதேயானாலும் யானதனைத் தாங்குமாறு இவன் பணிக்கின்றான். அப்பணி நான்தலைநிற்கவேண்டும் ஆகையால் மனமே நீ இது தவறென்று என்னை அலைக்காதே" என அதனோடு வாதிக்கின்ற இரகசியம் இதனிற் றெரியவரும். தந்தை ஏவியது என்னாது 'கொற்றவன்' என்று அவனைக் குறித்த சொல்லொன்றே இத்துணைப் பொருளையும் சாதிக்கப் போதுமானது. இப்படித் தன் மனச்சாக்ஷியுடன் முரண்கின்றபோது இராமன் பிறர்தலையில் பாரம்போட்டுத் தன்மனச்சாக்ஷியை அடக்குவதையே வழக்கமாக உடையவன். முன் பெண்ணைக் கொல்வதோ என்னும் பரிபவத்தால் தாடகையின்மீது பாணம் எய்யத் தயங்கியகாலத்திலும், விச்வாமித்திர முனிவனது கட்டளையை மேற்கொண்டவன்போல் பாவித்து,

...அறனல்லவும்
எய்தி னாலது செய்கவென் றேவினால்
மெய்ய நின்னுரை வேதமெ னக்கொடு
செய்கை யன்றோவறஞ் செய்யுமா றென்றான்

என்று காட்டியுள்ளார் கம்பர். அப்படியேதான் இவ்விடத்திலும், கொற்றவன் ஏவியது அறனல்லதாயினும் அதனைத்தான் செய்யல் கடன் என்றவோர் நீதி விளம்பித் தன் மனச்சாக்ஷியின் வாயை அடக்கினான் என்று கொள்ளுதல் வேண்டும்.

அரசின்மீது ஆசை கொண்டானெனின் பின்னேன் கைகேசியின் மொழிப்படி அதனை விடுத்து வனத்திற்கேக உடன்பட்டான் எனச் சிலர் வினவலாம். இதனில் ஒன்றும் வியப்பில்லை. "ஆழிசூ ழுலகமெல்லாம் பரதனே யாள நீ வனத்திற்குப் போய் வா வென்ன மன்னவன் பணித்தான்" என்பதை இராமன் கைகேயியின் வாயினாற் கேட்டதும், இனித் தான் இகலிப் பயனில்லை யென்பது அவனுக்கு வெட்டவெளிச்ச மாகியிருத்தல் வேண்டு மன்றோ. முரணுவானாயின் அரசினை அடையாததுடன் தன் நற்பெயரும் அழிந்துபோகும். அப்படிக்கின்றி அடங்கினான்போல் அகன்றானெனின் பதினான்காண்டிற்குப் பிறகாகிலும் அரசு தனக்குக் கிடைப்பினும் கிடைக்கலாம். பெருந்தகையாளன் தன்னருமைத் தம்பி பரதன் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆதலின் அவன் கேகயநாட்டிலிருந்து வந்தபின் தனக்கதனை மீண்டளிக்க இயலாவகை கெடுத்துக் கொள்ளல் மதியன்று.

இன்னண மெண்ணிய பல புணர்ப்பினாற்றானே இராமன் புறமொன்றுந் தோன்றும லிகலாது வனம் புக இசைந்தனன் என்னு முண்மையை அவன் கைகேயிக்குரைத்த மறுமாற்றத்தினின்று முணரலாம். "ஆழிசூ ழுலகெலாம் பரதனே யாளுமாறு மன்னவன் பணித்தனன்" என்றவள் பகர்ந்தவுடன், "மன்னவன் பணியோ இதுவன்று, இது உன் கருமமே; அதனை யான் நன்குணர்வேன்; ஆயினும் என்! நான் இப்பொழுது யாதும் வாதஞ்செய்தலின்றி உன் பணியைத் தாங்குவேனாயின் பின்னரதனால்எனக்குப் பயன் பெரிதுளது. எனக் குரியதல்லாததற்கு யான் ஆசைப்பட்டேன் என்ற பழியுஞ் சேராமல் பின் பரதனே பரிந்தளிக்க அரசினை யான் பெற்றவனுமாவேன். ஆதலின் உன்சொற்படி நடப்பதே இப்போது ஊதியமுடையதாம்" என்னுங் கருத்தையெல்லாம் உட்கொண்டு, "மன்னவன் பணியன்று ஆகில் நும்பணி மறுப்பனோ" எனச் சாற்றினான். 'நின்' என்னாது மிக விநயமாய்'நும்' எனக் கூறியதே அவன் கபடத்தைக் காட்டும். மேலும் "பரதனுக்கு இப்பொழுது அரசு வழங்கப்பெற்றதாயினும், பிறகு அது எனக்கு வந்து சேர்வதே திண்ணம்" என்னும் பொருளில், "என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ-என் இதின் உறுதி" என மொழிகின்றனன். "அடியனேன் பெற்றது" என்ற இறந்தகாலம் உறுதி பற்றி வந்த காலவழுவமைதி. இவ்வுண்மையைக் கண்கொண்டு பார்க்குங் கருத்தில்லார்தாம், இராமன் தன் மாற்றன்னையினிடத்தும் தன் தந்தைமகன் பரதனிடத்தும் கொண்டிருந்த நேயத்தை இச் செய்யுளில் காட்டுகின்றான் என எல்லோரும் சொல்லிய பொருளையே சொல்லிச்சொல்லித் திரிவர். மண்மேல் வைத்த காதலுடையவன் தான் என்று அவனே பின் சொல்வதற்கும் முன் இங்கு அவன் சொல்லியவைகளுக்கும் இத்துணைப் பொருத்த மிருத்தலால் இராமன் தனக்குரியதல்லாத தொன்றை அவாவினா னென்பது வெளிச்சமாகின்றது. முதன்மைந்தனாகிய அவனுக்கு உரியதாகாது பரதனுக்குரியதாயின், சுல்கச்சூளினாலல்லாமல் வேறெவ்வழியில் அவ்வாறு ஆதல்கூடும். ஆகையால், கற்புக்கரசியாகிய கைகேயி தன் கணவன் வாய்மையறத்தை நிறுத்தும்பொருட்டே மாயாப் பெரும்பழியைத் தான் சுமக்க உடன்பட்டவளாயினாள்.

இதுவரை, ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியாரது முறைக்கிணங்கி, செப்பருங் குணத்து இராமன் ஆராயப்பெற்றான். சுல்கச்சூளை ஏற்றுக்கொள்வதாயின் இம்முடிவையும் ஏற்றுக்கொள்ளாமல் தீருமோவென்பது பெரிதும் ஐயத்திற்கிடமான தொன்றாம்.



# தமிழ்ப் பாடம் 149.

## இலக்கணம்

[ 956-வது பக்கத் தொடர்ச்சி ]

லகர மெய்யீறு.

III. நிலைமொழி யிறுதியில் லகரமெய் + வருமொழி முதலில் வல்லினமெய்.

(A) நிலைமொழி யிறுதியில் லகரமெய் + வருமொழி முதலில் ககர சகர பகரங்கள்.

(a) (i) ஆறும்வேற்றுமைத் தொகையிலும் மற்ற வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகைகளிலும், பண்புத்தொகையிலும் உவமத்தொகையிலும், வருமொழிமுதலில் ககர சகர பகரங்கள் வர நிலைமொழியீற்று லகரமெய் றகரமெய்யாகத் திரியும் எனப் பொதுவாகக் கொள்ளலாம்.

முகில் + கருமை = முகிற்கருமை—6ம் வேற்றுமைத்தொகை

தோல் + செருப்பு = தோற்செருப்பு—3ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

வள்ளல் + குணம் = வள்ளற்குணம், பண்புத்தொகை.

முகில் + குழல் = முகிற்குழல்—உவமத்தொகை.

ii. உருபுகள் விகுதிகள் ஆகிய இவைகளின் ஈற்றிலுள்ள லகரமெய், வருமொழிமுதலில் ககர சகர பகரங்கள் வர, றகரமாகத் திரியும்.

கண்ணால்+கண்டான்=கண்ணாற் கண்டான்.
காக்கையில்+கரியது=காக்கையிற் கரியது.
வீட்டில்+பார்த்தேன்=வீட்டிற் பார்த்தேன்.
சொன்னால் + செய்வேன் = சொன்னாற் செய்வேன்.
பொன்போல்+சிவந்தது=பொன்போற் சிவந்தது.

iii. எழுவாய்த்தொடரில், நிலைமொழியீற்று லகரமெய் வருமொழிமுதல் ககர சகர பகரங்களோடு றகரமாகத்திரிந்தேனும் திரியாமல் இயல்பாகவேனும்புணரலாம்:—

மணல்+சிறிது=மணற்சிறிது, மணல் சிறிது.
தழல்+கொடிது=தழற்கொடிது, தழல்கொடிது.

(b) (1) வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, உம்மைத்தொகை, வினைமுற்றுத்தொடர், அடுக்குத்தொடர் ஆகிய இவைகளின் ஈற்றிலுள்ள லகரமெய், வருமொழிமுதலில் ககர சகர பகரங்கள் வர, பெரும்பாலும் றகரமாகத் திரியாது.

முகில்+பார்த்தான்=முகில்பார்த்தான் — 2-ம் வேற்றுமைத் தொகை.
கொல்+களிறு=கொல்களிறு—வினைத்தொகை.
கால்+கை, பல்+கண்=கால் கை, பல் கண்—உம்மைத் தொகை.
பேசேல்+பாவாய்=பேசேல் பாவாய்—வினைமுற்றுத்தொடர்.
சொல்+சொல்=சொல் சொல்—அடுக்குத் தொ தொடர்.

குறிப்பு:—நெல், செல் (மேகம்), வில், சொல், போன்று முதலெழுத்துக் குறிலாய ஈரெழுத்துப் பெயர்ச்சொற்கள் சிலவற்றின் ஈற்றிலுள்ள லகரமெய், வருமொழிமுதலில் ககர சகர பகரங்கள் வர, உம்மைத் தொகையினும் அடுக்குத் தொடரினுந் தவிர மற்றத் தொடர்களிலெல்லாம் றகரமாகத் திரிந்து புணரும்.

நெல்+பழுத்தது=நெற்பழுத்தது. } எழுவாய்த்
செல்+கருத்தது=செற்கருத்தது. } தொடர்.
வில்+பிடித்தான்=விற்பிடித்தான் } இரண்டாம்
சொல்+பகர்ந்தான்=சொற்பகர்ந்தான். } வேற்றுமைத் தொகை.

குறிப்பு:—வில்+கணை, என்பது வில்லும் கணையும் என்று விரியும் உம்மைத் தொகையாயின் வில் கணை என்றும், வில்லிலிருந்து வரும் கணை எனவிரியும் ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாயின் விற்கணை யென்றும் புணரும்.

(2) கொல், அந்தில் போன்ற அசைநிலைகளின் ஈற்றிலுள்ள லகரமெய், வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் வர, றகரமாகத்திரியாது.

செல்லுங்கொல்+குமரன்=செல்லுங்கொல் குமரன்
அந்தில்+கழலினன்=அந்தில் கழலினன்.

குறிப்பு:—ஆல், என்னும் அசைச்சொல்லின் ஈற்றிலுள்ள லகரமெய், வருமொழிமுதலில் க ச ப வர, றகர மாகத்திரியலாம்.

மிளிர்ந்ததால் + கருநீலக்கண்=மிளிர்ந்ததாற் கருநீலக் [கண்

(3) இன்மை தொன்மை நிறைவு ஆகிய பொருள்களில் வரும், இல் தொல் சால் என்னுஞ் சொற்களின் ஈற்றிலுள்ள லகரமெய், வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் வர, றகரமாகத்திரியாது.

இல்+பொருள்=இல்பொருள்
தொல்+புகழ்=தொல்புகழ்
மதிசால்+கருமம்=மதிசால் கருமம்.

(B) நிலைமொழியிறுதியில் லகரமெய்+வருமொழி முதலில் தகரமெய்.

(1) நிலைமொழி யிறுதியில் லகரமெய் நிற்க, வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் வருங்கால், எவ்வெவ்விடங்களில் முன்னுரைத்த விதிகளின்படி அந்த லகரமெய் றகரமெய்யாகத் திரியுமோ, அவ்விடங்களிலெல்லாம் தகரமெய் வந்தாலும் றகர மாகத் திரியும். ஆனால் நிலைமொழியீற்று லகர மெய் மாத்திரமன்றி வருமொழிமுதல் தகர மெய்யுங்கூட றகர மெய்யாகத் திரியும்.

முகில்+கருமை=முகிற்கருமை. }
முகில் + தொன்மை=முகிற்றொன்மை. }
தோல்+செருப்பு=தோற்செருப்பு. }
தோல்+தட்டு=தோற்றட்டு. }
வள்ளல்+குணம்=வள்ளற் குணம் }
வள்ளல்+தன்மை=வள்ளற்றன்மை }
முகில்+குழல்=முகிற்குழல். }
முகில்+தோகை முகிற்றோகை }
கையால்+பிடித்தான்=கையாற் பிடித்தான் }
கையால்+தொட்டான்=கையாற்றொட்டான். }
பொன்போல்+சிவந்தது=பொன்போற் சிவந்தது
பொன்போல்+திகழ்ந்தது=பொன்போற்றிகழ்ந்தது.

(2) வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் வர, நிலைமொழி யீற்று லகரமெய் எவ்வெவ்விடங்களில் றகர மெய்யாகத்திரியாதோ, அவ்விடங்களிலெல்லாம், வருமொழி முதல் தகரம் வர, அத்தகரம் மாத்திரம் றகரமாகத்திரிவதுடன்நிலைமொழியீற்று லகரமெய்யும் கெட்டுவிடும் எனக்கொள்க.

கோல் + பிடித்தான்=கோல்பிடித்தான். }
கோல்+துறந்தான்=கோறுறந்தான. }
உழல்+கருத்து=உழல் கருத்து }
உழல்+தன்னுயிர்=உழற ன்னுயிர் }
தண்மைசால்+கண்= தண்மைசால் கண் }
தண்மைசால்+தடங்கள்=தண்மை சாறடங்கள் }
தோன்றல்+காண்=தோன்றல் காண் }
தோன்றல்+தோன்றாய்=தோன்றா றோன்றாய் }

இப்படியே, மற்ற உதாரணங்களும் அமைத்துப் பயின்று கொள்க.

## மானேஜர் அறிக்கை,

விலக்கரிய இடையூற்றால் சென்ற வாரத்திதழ் அன்று வெளிவர இயலததாகி இன்று அனுப்பப் பெறுகின்றது. இவ்வாண்டின் இறுதி இதழ் (50-வது) இன்றைக் கனுப்ப உரியதாய் நிற்பதை அடுத்தவாரம் அனுப்பிவைப்போம். இச்சிறு மாறுபாட்டை எமது நண்பர் பொருள்படுத்தார் திண்ணம். "மானேஜர்"




# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி. திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப்படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

இனம்! இனம்!!

## வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

## கந்தபுராண வெண்பா

வெண்பாப் புலி வேலுசாமி அவர்களால் பாடப்பெற்றது. தமிழரால் போற்றப்படுவதற் குரியது.

ஆறு காண்டங்களையும் 5665 சிறந்த நேரிசை வெண்பாக்களையு முடையது.

விலை ரூபா **4**. தபால் செலவு வேறு

EDUCATIONAL PUBLISHING CO.
**Nungambakam, Madras.**

## அரவிந்தர் கடிதம்.

புதுச்சேரியில் ஞானத்துறை படிந்துவைகும் ஸ்ரீ அரவிந்தர் இருபது வருடங்களுக்கு முன்னர் தமதுமனைவிக்கு எழுதிய சில அரிய கடிதங்களின் மொழி பெயர்ப்பு நூல். இதன் விலை அணா 2. இரண்டணாஸ்டாம்பு அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்.— லோகோபகாரி ஆபீஸ்,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

Estd. **NATIONAL** 1906

**INSURANCE COMPANY LIMITED.**

*Head Office*:-**9, Old Court House St., Calcutta.**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

*The "National" will surpass any other Company in these tests.*

(1) Indian Capital-Indian Management for the benefit of Indians.
(2) The Company has never contested a claim on a technicality.
(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms.

Apply to:— R. G. DAS & CO., *Managers.*
**T. ANANTACHARI**, B.A.,
Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.

### அறிக்கை.

கலாநிலயத்தின் முதலிரண்டாண்டு பைண்ட் புத்தகங்கள் மிகச் சிலவே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவில் வரைக.

**கலா நிலயம் ஆபீஸ்,**
வேளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை

## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

### பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

### ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

### கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

### ஏமாங்கதத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

### முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்த மொழிபெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந் நாவல்நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1-8.

**விலாசம்:—கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.**




# வர்த்தமானம்

பர்மாவில் சென்றவாரம் ஏற்பட்ட பூகம்பத்தால் சேதம் அதிகமென்றும், 36பேர் மாண்டனரென்றும், பலர் காயமடைந்துள்ளனரென்றும், இரங்கூன் நகருக்கு இதனால் சேதம் ஒன்றும் ஏற்படவில்லை என்றும் பர்மாச் செய்தி கூறுகின்றது.

***

சென்னைக் கார்ப்பொரேஷன் தேர்தல் விஷயமாய்ச் சென்னை அரசாங்க ஸ்தலசுயஆட்சி இலாக்கா பிறப்பித்துள்ள அறிக்கை வருமாறு:—

கார்ப்பொரேஷன் டிவிஷன் தேர்தலுக்கு அபேக்ஷகர்கள் நியமனச் சீட்டுக்களைத் தாக்கல்செய்வதற்கான தேதியிலோ முன்னதாகவோ ஒவ்வொரு அபேக்ஷகரும் கமிஷனரிடம் 100 ரூபாய் பணமோ அல்லது மார்க்கெட்டு மதிப்புக்குச் சமமான கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகளோ கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுக்காத அபேக்ஷகரின் நியமனம் செல்லுபடியாகாது.

எந்த அபேக்ஷகருடைய நியமனச் சீட்டாவது நிராகரிக்கப்பட்டால் அவர் கொடுத்த டெபாசிட்டுத் திருப்பிக்கொடுத்து விடப்படவேண்டும். தேர்தலுக்கு முன் அபேக்ஷகர் இறந்துவிட்டால் வார்சிடம் அந்த டெபாசிட்டு கொடுத்துவிடப்பட வேண்டும். அபேக்ஷகரில்லாமல் அவருக்காக வேறுயாராவது கொடுத்திருந்தால் அவரிடம் திருப்பிக்கொடுக்கப்படவேண்டும்.

டெபாசிட்டு கொடுத்த ஒரு அபேக்ஷகர் தேர்தலில் வெற்றிபெறுமல் அவருக்குக்கிடைத்த ஓட்டுகள், மொத்தம் பதிவான ஓட்டுகளில் 8-ல் ஒரு பாகத்திற்குக் குறைவாகவிருந்தால் டெபாசிட்டுப் பணம் பறிமுதல் செய்யப்படும்.

தேர்ந்தெடுக்கப்படாத ஒரு அபேக்ஷகரின் டெபாசிட்டு 3-வது உபவிதிப்படி பறிமுதல் செய்யப்படாவிட்டால் தேர்தல்முடிவு கெஜட்டில் வெளியிட்டவுடன் திருப்பிக்கொடுக்கப்படவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட அபேக்ஷகருடைய டெபாசிட்டு அந்த அபேக்ஷகர் கவுன்சிலில் ஸ்தானம் வகித்த உடனேயோ அல்லது ஸ்தானம் வகிக்காவிட்டால்கூட கவர்ன்மெண்டார் உத்தரவிட்ட வுடனேயோ திருப்பிக் கொடுக்கப்படவேண்டும்.

***

சைமன் கமிஷன் அறிக்கையின்மேல் ஒவ்வொரு மாகாண அரசாங்கத்தாரும் தங்கள் அபிப்பிராயத்தை அறிவித்திருக்கின்றார்கள். பஞ்சாப் மாகாண அரசாங்க உத்தியோகஸ்தரான இ. எச். லின் காலின் என்பவர் கூறியுள்ள அபிப்பிராயம் வருமாறு:—

ஜனப் பிரதிநிதிகளிலிருந்து கவர்னர் மந்திரிகளை நியமிக்க வேண்டும்.

மந்திரிசபைக் கூட்டங்களில் கவர்னர் தலைமை வகிக்கக்கூடாது.

மந்திரிசபைக் காரியதரிசியை மந்திரிகளே கவர்னரின் அங்கீகாரத்திற்குட்பட்டு நியமிக்க வேண்டும். அவருக்கு நேர்முகமாகக் கவர்னரிடம் சம்பந்தம் இருக்கக்கூடாது.

ஒவ்வொரு சமுகத்தின் ஜனத்தொகையையும் ஓட்டர்களின் தொகையையும் அனுசரித்து அவர்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்க வேண்டும்.

வரவுசெலவுத் திட்டம் முழுவதும் சட்டசபையின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். சட்டசபையின் அங்கீகாரத்தைப் பெறவேண்டாத தென்று எதையும் ஒதுக்கிவைக்கக் கூடாது.

இந்தியா கவர்ன்மெண்டில் மந்திரிகளை நியமிக்கும் அதிகாரத்தைக் கவர்னர்ஜெனரலிடம் கொடுக்கலாம். ஆனால் இரண்டு சபைகளிலுமுள்ள ஜனப்பிரதிநிதிகளிலிருந்தே அவர் மந்திரிகளை நியமனம் செய்ய வேண்டும். அவர்கள் சட்டசபைக்கு ஜவாப்தாரியாக இருக்க வேண்டும்.

தாற்காலிகமான சில பாதுகாப்புகளுக் குட்பட்டு இந்தியாகவர்ன்மெண்டானது இந்தியா சட்டசபைக்கு ஜவாப்தாரியாக இருக்கவேண்டும். அரசியற் சட்டம் அமுல்நடக்க முடியாமற் போய்விடும் சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள கவர்னர்ஜெனரலுக்கு விசேஷ அதிகாரத்தைக் கொடுக்கலாம். அந்நியநாடு சம்பந்தமான விஷயம் ராஜப்பிரதிநிதியிடம் இருக்க வேண்டும்.

பர்மாப்பிரிவினை அவசியமா வென்பதைப் பர்மியர்களே முடிவுசெய்யும்படி விட்டுவிட வேண்டும்.

இந்தியாச் சட்டசபைக்குக் கலப்புத்தொகுதிகளின் மூலமாக நேர்முகமான தேர்தல் நடைபெறவேண்டும்.

***

சர்வகட்சி மஹாநாட்டின் விசேஷக் கமிட்டியின் கூட்டம் சில தினங்களாக நடந்துவருகின்றன என்றும், 4-ந்தேதியன்று பர்மாப் பிரிவினை விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டதென்றும், அகில பர்மிய சங்கத்தினர் பர்மாவை உடனே இந்தியாவினின்று பிரித்துவிட விரும்பவில்லை என்றும் இவ்விஷயமாய் ஒரு முடிவும் ஏற்படவில்லை என்றும் லண்டன் செய்தி கூறுகின்றது.

***

ஆப்கனிஸ்தானத்து மாஜி அரசர் அமனுல்லாகான் காலத்தில் மந்திரிகளாகவும், பெரிய உத்தியோகம் வகித்தவர்களாகவு மிருந்தவர்கள் இராஜத் துவேஷக் குற்றத்திற்காகச் சென்றவாண்டு சிறையிடப்பட்டனர். அவர்கள் இப்பொழுது புதிய அரசரால் விடுதலைசெய்யப்பட்டனர் என்று ஆப்கன் செய்தி கூறுகின்றது.

18/9/33

KALANILAYAM.
REG. NO. M, 2324.


## அகராதிகள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| தமிழ்ச்சொல் அகராதி (உதாரணங்களுடன்)—மூன்று பாகம் ... | 18 | 8 |
| தமிழ்மொழி அகராதி The Coronation Tamil Dictionary ... ... | 10 | 0 |

### தமிழ் - தமிழ் - இங்கிலீஷ் அகராதி.

வி. விச்வநாதபிள்ளை இயற்றியது :: 676 பக்கங்கள்

எல்லாப் பதங்களுக்கும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு சொல்லுக்கு மிருக்கிற பல பொருள்களும் அவைகளுக்கு நேர் நேரே ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது. வி. பி. செலவு வேறு. விலை ரூபா 6 0 0.

## :: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணு 12.

கலாநிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.

## ANCIENT JAFFNA

A Momentous Book
BY
MUDALIAR C. RASANAYAGAM C.C.S.
WITH A FOREWARD BY
Prof. S. KRISHNASAMI IYENGAR, M.A.,

An authentic History of North Ceylon particularly of Jaffna, based on Epigraphic Linguistic, Archeological researches is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Isand by the Europeans and it reads like a romance.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0.**
**V. P. Charge Extra**

KALANILAYAM
Purasawalkam, Madras.

ஒட்டக்கூத்தர் பாடிய

## தக்கயாகப் பரணி

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம் : 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | | |
|---|---|---|---|
| பால காண்டம் | ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் | ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் | ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் | ... | ரூ. | 5. |

(வி.பி. செலவு வேறு)

மானேஜர்:—கலாநிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—“ கலாநிலயம் ”,
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)